# "உழவர் கோன்"



அமரர்

# கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை

## அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுமலர்

**07.04.2022**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும்,

கிளிநொச்சி உருத்திரபுரம் 8ஆம் வாய்க்காலை வதிவிடமாகக் கொண்டவரும்

தான் தடம் பதித்த மண்ணை பொன் கொழிக்கும் பூமியாக மாற்றிய பெருமைக்குரியவரும்

அமரர்.

# திரு.கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை அவர்களின் நினைவுத்தடங்கள்

07.04.2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குன்றிலிட்ட விளக்காகிய
எங்கள் நெஞ்சம் நிறைந்த
இதய தெய்வத்திற்கு

# சமர்ப்பணம்

*எம்மனைவரையும் ஊர் உலகம் அனைத்தும்*
*எமைப் போற்ற கண்ணை காக்கும் இமையாக*
*அன்றி கண்ணின் மணிகளாய் அனைத்து*
*தகுதிகளையும் எமக்களித்து வாழ வைத்த*
*வஞ்சமற்ற எங்கள் அருமை அப்பா....*

*அமரர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை*
*அவர்களது பாதக் கமலங்களுக்கு இந்நூல் சமர்ப்பணம்.*


*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*
*இங்ஙனம்,*
*குடும்பத்தினர்.*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நீங்காத நினைவில்...



அமரர்

# கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை

மண்மகிழ : 1932.08.27 கண்நெகிழ 2022.03.08

**அவர்களின் திதி வெண்பா**

பிலவவருடம் பங்குனித்திங்கள் வளர்பிறை
கார்த்திகைத் திதி எட்டாம் நாளில் பாரினிலே
குன்றாப் புகழ் பசுபதிப்பிள்ளை எனும் நாமம் கொண்ட
பெருந்தகை இறையோடிணைந்தார் அறிக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசிஎன்1 உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட் பணிந் தேத்தஅருள் செய்த
பீடுடையபிர மாபுரம்மேவிய பெம்மானிவ னன்றே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்விரை
யார்கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றியென்னும்
கைதான் நெகிழ விடேன்உடை யாய்என்னைக்
கண்டுகொள்ளே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே !
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே !
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே !
சித்தத்துள் தித்திக்கும் தேனே !
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே !
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

ஐயும் தொடர்ந்து விழியும் செருகி அறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யும் திருவொற்றியூருடையீர் திருநீறு மிட்டுக்
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தோதவும் கற்பியுமே

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீயாடும்போது உன் அடியின்கீழ் இருக்க வென்றார்.

# திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் - குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் -தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற-குமரேசா
அறநாலைப் புகல்வோனே அவிநாசிப்- பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சிறக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்யக் குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேழ்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை
## வாழ்க்கைத் தடம்

அகிலத்தின் கீழ்திசையில் அழகிய புன்னகை
ஆழ்கடல் சூழ்ந்திட அசைந்திடும் மேனகை
இராவணன் சொல்மீட்டிய அரசின் காரிகை
இராமனும் வில்லீட்டிய முரசின் பேரிகை

ஈழமது தழைத்திட கண்ணில் பட்ட பாடல்
உலகமது பிழைத்திட கண்டால் வரச்சொல்லும் தேடல்
தலைமகளின் நாணம் தாங்கிய யாழ்ப்பாணம்
அலைமகள் காணும் தீவுகள் அதன் காப்பாகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாத் தீவிலும் இசைத்திடும் தீவு இது - மனம்
கல்லால் ஆயினும் இணங்கிட இனிக்கும் மது
வில்லால் தாவிலும் அன்பாளர் நெஞ்சம் தாக்கா நின்றிடும் அம்பு
பொல்லாதவரையும் பொறுப்புணர்த்தி விருந்தோம்பும் அன்பு

நெடுந்தீவு........!!!
நீண்ட இந்த தீர்க்கமான உறவு
நெடுந்தீவு..........!!!!
உயர்ந்த உன்னதங்களின் அடர்வு
நெடுந்தீவு .......!!!!!
வியந்து பார்க்கவைக்கும் பசுமையின் படர்வு

அலையும் கடலும்
மணலும் மண்ணும்
கலையும் கூத்தும்
சிலையும் சிற்பமும்
பனையும் நொங்கும்
தினையும் தெங்கும்
கறவையும் பறவையும்
குருவியும் குமரும்
குதூகலிக்கும் குருத்தும்
குந்திப் பேசும் கருத்தும்
மந்திபாய மரமாடும் மகிழ்வும்
முந்தியோரக் கண்டால் கரம்கூப்பும் நெகிழ்வும்
சந்ததியில் சடங்காக அன்று
சந்தியில் அடங்காதவரால் சங்கடங்கள் இன்று

அன்பான ஊரின் அரவணைப்பின் பெயரில்
அம்பலவானர் ஆசைமகன்
மீசைஅரும்பிய காதலவன் கார்த்திகேசு மைத்துனி
வேலர் கதிராசிப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் முழுதும் இணையான முல்லை
இன்ப வாழ்வின் இனிய பிள்ளைகள்
நாகமுத்து சேதுப்பிள்ளை அடுத்து வள்ளிப்பிள்ளை வரமாய்
வர பெண்களே பெரும் செல்வமாகினர்
ஆண்பிள்ளை ஆய்வில்
இருவரும் இருக்கவில்லை ஓய்வில்
ஓடிய கோவில்களில் தேடிய தெய்வங்கள்
தெளிர்த்தன பாக்கியம்
துளிர்த்தன ஆண்களின் வாக்கியம்
கணபதிப்பிள்ளை நாகமணி பேரனின் நாமத்திலும் பெற்றனர்
அம்பலவானர்
தேடலின் கூடலில் திரவியங்கள் உதித்தனர்
பாடலின் தொடக்கத்தில் பல்லவிகள் குதித்தனர்
இல்லற இசையால் சரணங்கள் பிறந்தன
நாகலிங்கம் வாத்தியார் எனும் நல்லாசானுடன்
நகச்சுவை பேரன்பன் பசுபதிப்பிள்ளையும்
கடைச்சுவை சின்னம்மாவுமாக சிறந்தது இல்லறம்.

காலமதன் கரையில்
கால்களின் விரைவில்
ஆண்டு ஐம்பத்தியிரண்டில்
வேண்டும் விவசாயமென
நீண்டநெடுந்தீவிலிருந்து
பூண்டார் வாழ்விசைப் பயணம்

கிளிநொச்சியின் அந்திவானில் அதிசயம்
உருத்திரபுரீச்சரம் எனும் சிவமயம்

நூற்றாண்டுப் பழமை வாழ்வியல்
தோற்றுண்டு போகாத தொல்லியல்
சதுர வடிவில் ஆவுடையாரோடு லிங்கம்
அதுவே ஆதித் தமிழின் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாளர்கள் அதிகமாய் வாழ்ந்த
அயலவர்களெல்லாம் ஒன்று சூழ்ந்த
உருத்திரபுரம் பத்தாம் வாய்க்கால் கிராமத்தில்
ஐந்தாம் வீட்டில் கால் பதித்தார்

இளைஞர் இவர் ஏர் பிடித்தார்
இளைப்பாற மனமின்றி தினம் உழைத்தார்
வரப்புயர்த்தி வயல் நடந்தார்

இயற்கை முறை விவசாயம்
கூட்டுப் பசளை மாட்டு சாணம்
வீட்டுத்தோட்டம் பழமரங்கள்
வேலியோரப் பனை மரங்கள்
வாழை, மா, பலாவோடு பசுமையான பதி...
காளை இவர் இளமையோடு பசுபதி..

மாலை ஏறும் மணநாளும்
நாளையென நாள் பார்த்து
நல்லம்மா எனும் நங்கை
சின்னத்தம்பி வள்ளியம்மை பெற்ற மங்கை
மனையாளாக்கி மாங்கல்யம் பூண்டார்
மனதாளும் மனைவி
நிழலான துணைவி சிரித்தாளும் கணவர்
எழிலான குடும்பமது
எட்டாம் வாய்க்கால் இரண்டாம் குறுக்கில்
இனிதான
இல்லறக் கொடியில்
பூ..வாய் பூத்த மூத்த மகள்
ரஞ்சினி ,அடுத்து மங்கயற்கரசி,
ஆண்பிள்ளைகளாக ரவீந்திரநாதன்
தம்பிகளாக குகநாதன் சிவகுமார்
இவர்களின் தங்கைகள் கஜவதனா
கலாதேவி என பெரும்
பிள்ளைச் செல்வங்களோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செழித்தோங்கிய குடும்பம்

பசுபதி என்றால் குறும்பான பேச்சு
பசுபதி நின்றால் சிரிப்பின் வீச்சு
புலவுகளில் எந்திரமாய் பயிர் செய்தவர்
உழவு எந்திரம் வாங்கி வயலெல்லாம் வலம் வந்தார்
மண்ணெண்ணெய் மெஷின் முதல்
மெசி பெர்குசன் மொடல் வரை
விலாசமான மெஷின்களின் துரை

வண்டில் மாடும் வளவுக்குள் நின்றது
பெண்டில் பிள்ளைகளைப்போல்
அவைகளையும் அன்பாய் பார்த்தார்

சோகம் ஒன்று சூழ இருப்பது
தெரியாமலிருந்தது அன்று
தொண்ணூறில் மகன்களில் மூத்த
தோளுயர்த்திய செல்வமகன் ரவி
வயலில் கிருமிநாசினி வீசியவர்
செயலிழந்தார்........ அனைவரையும் அழவைத்து
அமரரானார்.....

ஆனந்தம் அற்றுப்போனார் அப்பா
ஏனிந்த சோகம் கடவுளை நொந்தார்
சுமைகளைத் தங்கி ஏணியானார்
பிள்ளைகளின் கல்வியில் ஆசானாய்
அன்பில் அவர்களின் நல்ல அப்பாவாய்
மகள்கள் மூவரை ஆசிரியராக பார்த்தார்
பூவாய் வளர்த்த மூத்த மகளும்
புனிதமான மருமகன் திருஞான சம்பந்தரை மணந்து
இங்கிலாந்தில்
பிள்ளைகள் பேரப்பிள்ளைகளுடன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காந்தியின் நேர்மையும் அறமும் கொண்ட
மகள் மங்கயற்கரசி ஆசிரியை
அமைதியின் அருவமான
இராஜேஸ்வரனை துணையாக்கி
குழந்தைகள் சூழஅயல் வீட்டில் ஆனந்தமாய்
மகன் குகா எனும் குகநாதனுக்கு
அன்பும் பண்புமுடைய ஜெயந்தி
இணையாக்கி பிள்ளைகளுடன் இங்கிலாந்தில் இவரும்

சிவகுமார் சாந்தமும் அன்பும்
கொண்ட சாந்தரூபியை கரம்பிடித்து
கனடாவில் பிள்ளைகளுடன்.

மகள் ஆசிரியை கஜவதனா அதிபர்
கண்ணபிரானை மணந்து மழலைகளோடு
கடைக்குட்டி மகள் ஆசிரியை கலாதேவி
உயிர்களுக்கெல்லாம் உணவளிக்கும் விவசாயி
லிங்கநாதனுடன் துணையாகி
மகிழ்வாக பிள்ளைகளுடன்

அனைத்துப் பிள்ளைகளின்
அன்பையும் பெற்றார்
பேரர்களோடு இன்பமும் உற்றார்
வரம்புயர நீரை நிறைத்தார்
பரம்பரையை பாரில் விதைத்தார்
பாரம்பரிய உழவு முறைக்காய்
"கரை எழில் " , "உழவர் கோன்"
என இரு விருதுகள் பெற்ற விருட்ஷம் இவர்
சிவனுக்கும் இவருக்கும் நல்ல சிநேகிதம்
நடராஜருடன் நல்ல நட்பு...
பரமசிவன் குடும்பம் பழத்தால்
இரண்டாச்சு என பகிடிவிடுவார் அப்பு...
கடவுளையே காக்கா பிடிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாம்பழத்த மடக்கியவர்
பிள்ளையார் என்று சொல்லிச் சிரிப்பார்
சிவநகரில் இவர் காணி
அதில் நிறைய தென்னை
வயோதிபத்திலும் செழிப்பாக்கினார் மண்ணை

பிள்ளைகளைத் தாங்கிய பிதா மகன்
முல்லைப்பூவின் மென்மையான பெரும் சிவன்
பாட்டனும் பூட்டனும் ஆன பாக்கியவான்
ஊ ரெல்லாம் நேசித்த நேர்மகனை
சீரெல்லாம் செய்து பூசிக்க
பேரர்கள் பூட்டர்களுக்கு
பொழுது வழங்காமல் போனார்
காரிருள் கண்களோடு
தாத்தாவைத் தேடும் பருவத்தில்
உருவப்படமாய் மாறினாரே மாதவம்

வருத்தம் கண்டதில்லை இவர்
பொருத்தமான புன்னகையில்
போக்கிடுவார் வலியெல்லாம்
வாரம் இரண்டு வாட்டியது வேதனை
பூ மகளும் பேத்தி மிதுவும்
வந்து நின்றனர்
அருகிருந்து ஆதரித்தனர்
நீண்ட காலத்தின் பின் கண்ட
முதல் பேத்தி முறுவலுடன்
முகம் சிரித்தார்
ஆரோக்கியம் ஆனார் அவர்களும்
புறப்பட்டு இருவாரத்தில்
சாதாரண சளி காய்ச்சல்
வயதானபோதும் வைத்தியசாலையும் வீடுமாய்
சாத்தியமில்லாப் பொழுதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூத்தமகன் குவாவின் மடியில்
சாய்த்த தலையும்
வாழ்நாள் முழுதும் தான் பார்த்த மகள் வவாவின்
கரமும் பற்றியபடி
உன்னைவிட்டு ஒருபோதும் விலகாத நான்....
நீ தந்தால்தானே சாப்பிடுவேன் ஊன்....
உன்னைச்சுற்றியே உழன்றேன்
பெண்ணே என் மகளே பார்வையால் பேசினார்
பார்த்துக்கொள் மகனே பரம்பரையை என
பேசாமல் பேசிவிட்டு
வீசிய காற்றில் விடை பெற்றார்....
மூசிய கண்ணீரால் முற்றம் முழுதும் நீரானது
நீங்கள் இல்லாத்துயர் ஆறாதது....

காலத்தின் கனிவுதனில்
சாலத்தே சிறந்து பிறந்து
நல்ல யோகத்தில் வளர்ந்து
இல்லத்தில் இன்பமுற்று
சுற்றத்துடன் சுகமும் கண்டு
கற்றதும் பெற்றதும்
பெருவாழ்வின் பாக்கியமாக்கி
பற்றது வாழ்வின் பதிலதில்
முற்றும் முழுமையாகி
சிவன் அவன் காலடியில்
பசுபதிப்பிள்ளை அவர்கள் ஆன்மா
அமைதியடையட்டும்.

ஓம் சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத என் கண்ணின் மணியே...

உத்தமரே சத்தியரே என் வாழ்வின் கதிரவனே
குற்றம் குறை காணா குடும்பத்தின் நிழற்குடையே!
தனித்து வந்த எனை தோப்பாக்கி மகிழ்ந்தீரோ
என் பாசத்தின் நேசகனே பாக்கியவானே
எனை பதைக்கவிட்டு பறந்தீரோ நெடுந்தூரம்

அள்ளி அரவணைத்து அன்பு காட்டிய
என் அன்னைக்கு நிகரான மன்னவரே
என் நெஞ்சம் நிறை கொள்ளை கொண்டவரே
குறை ஒன்றும் வைக்காத குன்றிலிட்ட தீபமே
எனைவிட்டு முதலிலே ஏன் ஓடி சென்றீரோ
என் இதயம் கலங்கிடவே இறை உமை அழைத்ததேனோ

அன்பால் அரவணைத்த அற்புத தெய்வமே!
உம் இடத்தை நிரப்பிக்கொள்ள இனி இங்கே யார் எமக்கு
அனைவரையும் வளர்த்திங்கு ஆளாக்கிய அன்னலே
அயலவரும் உறவினரும் அன்புருகும் நாயகனே
வேளாண்மையின் முதல்வனே எம் வாழ்வின் பசுமையாளனே
உம் மடிதனில் தலை வைத்து
முதல் செல்ல காத்திருந்த என் ஆசை
விழலுக்கு இறைத்த நீராய் நீராசையானதோ

ஏழேழு பிறப்பெடுத்தாலும்
உமைத்தவிர வேறொன்றும் எனக்கு பெரிதல்ல
உம் விந்தார பாதமதில்
என் நெஞ்ச நினைவுகளை
சமர்ப்பித்து வணங்குகின்றேன்
என் தெய்வத் திருமகனே

**பாச மனைவி : பசுபதிப்பிள்ளை நல்லம்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒருவரம் தருவீர்களா எங்கள் அப்பா....

என்ர அப்பாவின் செல்வங்கள்
எழுவரில் மூப்பாய் எனைப்பெற்ற தெய்வமே
என் இளையவர்கள் போல் நீண்ட காலம்
உங்கள் அருகில் வாழும் பாக்கியம் எனக்கில்லை
நாடு பல கடந்து தூரமதில் இருந்த போதும்
தொலை அலைகளில் தொடரும் உறவாய்
வாஞ்சையுடன் நீங்கள் கூறும் வார்த்தைகள்
குறும்பாக சொல்லும் குட்டிக் குட்டி செய்திகள்
இனியில்லையே எனக்கென ஏங்குகிறேன்.

உங்களை தொட்டுக்கொஞ்சி பணிவிடை செய்ய
பாக்கியம் தொலைத்த பாவியாயய் ஆனேனோ
அண்மையிலே உங்கள் அருகில் வந்து
ஆசீர்கள் பெற்று வந்த அன்பு பேத்தி மிதுரா
ஆசையுடன் காத்திருக்கும் திருஷனுக்கும், டயானாக்கும்
யாதுவிடை சொல்ல போறேன்
வழியின்றி விழிநீர் சொரிகின்றேன்.

உங்கள் பாசக்கரத்தால் என் தலைவருடி
நேசமுடன் "பூ" எப்படியம்மா இருக்கிறாய்
எனும் அன்பு சொல் கேட்டிட
என் இறுதி மூச்சுவரை காத்திருப்பேன்.

**அன்பு மகள் திருமதி திருஞானசம்பந்தர்**
**ரஞ்சினி "பூ" (லண்டன்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உம் தடம் பதிக்க....

என் அயலில் நீங்கள் இருக்க
ஆறுதலாய் நாமிருந்தோம்
உங்கள் நேசம் கொண்ட பாசம் மிகையால்
இரவு பகல் ஒன்றும் பெரிதாக தெரிவதில்லை
எங்கள் சேவலது கூவினாலும் நாயது குரைத்தாலும்
இருமி ஒரு செருமலுடன் உடன் பதில் தருவீரே.

விடிந்ததும் விடியாததுமாய் வேலிக்கு அருகில் வந்து
உங்கள் நெஞ்சம் தவழ்ந்து கொஞ்சி தீர்த்த
அன்பிற்காக ஏங்கித்தவிக்கும்
பேத்தியள் சங்கீர்த்திகா, கினோஜினியையும்
பாசமிகு பேரன் கினோஜனையும்
பார்வையால் செலுத்தும் புன்னகைக்காய்
வழியது மேல் விழி வைத்து
வாசலதில் நிற்கின்றோமே

உம் தடம் பதிக்க
பாக்கியம் பெற்ற என் வளவுதனில்
ஒரு தரமேனும் ஓடி வர மாட்டீரா
எங்கள் அப்பா

**ஆசைப்புதல்வி :**
**திருமதி .இராசேஸ்வரன் மங்கையற்கரசி**
**( ஓய்வுபெற்ற ஆசிரியை )**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் ஆருயிர் அப்பாவே...!

ஐயனே என் ஆருயிர் அப்பாவே!
என் வாழ்வை செதுக்கிய சிற்பியே!
எம் வாழ்வு சிறக்க உமை வருத்திய உத்தமரே
ஏனப்பா இந்த அவசரம் ஏற்கத்தான் முடியுமா?

கடல் கடந்த தேசமதில் வாழும் என்
மடி மீது தலை வைத்து உம் உயிர் நீத்திரே
இவ்வுலகில் இதை விடவும் பெரும் பேறு உண்டோ
இவ்வளவில் எனை நானே தேற்றுகின்றேன்
கண்மூடி உங்கள் அன்பை இரசித்திட்டால்
கண்ட துன்பம் பட்ட துன்பம் காற்றாய் பறந்திடுமே

ஓடி வந்து உமைப்பார்க்க ஏங்கி நின்ற
என் அன்புச் செல்வங்கள் உங்கள் பேரர்கள்
நிலாணி, ஆதவன் ஓங்கி ஓங்கி கதறும் சத்தம்
ஒலிக்குமென்றும் உங்கள் காதினிலே

பொருள் பணமோ சிறப்பன்று
பேரன்பே சிறப்பென்பீர் உலகமதில்
என் சிந்தையது ஓயும்வரை
கனவிலும் மறப்பேனோ என் அப்பா

எமை விட்டு தூரத்தே சென்றாலும்
என்றென்றும் எம்துணை நீரே அப்பா
உம் பாதமதை பணிந்து - எங்களை
ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம்.

ஆருயிர் மகன் குகநாதன் (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தை கலங்கி நிற்கின்றேன் அப்பா....

காற்றிடை வந்த செய்தி
கடுமையாக நெஞ்சை தாக்கியது
இது கனவாக இருக்காதோ என இரஞ்சினேன்
என்ன நான் செய்வேன் ஏது எடுத்துரைப்பேன்
என் குலவிளக்கில்லா பூமியில் எப்படி தடம் பதிப்பேன்
சிந்தை கலங்க திராணியற்றவன் ஆனேன்

என் வாழ்வு சிறப்புற உரம் தந்த ஏணியே
உம் வஞ்சகமற்ற வாஞ்சையும் ஓய்ந்திடா உழைப்புமே
எப்போதும் எங்கள் ஊன்றுகோலாகின
ஊர் கடந்து உயர்வாய் வாழ்ந்தாலும்
எமக்காய் நீர் வடித்த வியர்வையை எண்ணி
ஒருபோதும் தலைக்கணம் வந்ததில்லை.

என் கண்மணியும் உங்கள் பேரக்குழந்தைகள்
டர்சன், லோஜா, சஜீத் மூவரும்
எங்கே எங்கள் தாத்தா என்றால்
யாதுரைப்பேன் என் தெய்வமே அப்பா
எங்கு தான் நீர் சென்றாலும்
எம் இதயக்கமலத்தில் என்றும் எங்கள்
பசுமரத்தாணிதான் அன்பு அப்பா

இளையமகன் - சிவகுமார் (லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன தவம் செய்தேன் அப்பா!

என்ன தவம் செய்தேன் அப்பா
உங்கள் இறுதி மூச்சுவரை அருகில் இருக்க
கச்சிதமான கரிசனையும் கடைக்கண் பார்வையும்
கானல் நீராக ஆகியதோ...!

உங்கள் தடம் பட்ட வீடும் வளவும்
அள்ளி வாத்து குளித்த கிணற்றடியும்
நீங்கள் முதுகு உரஞ்சும் தென்னையும்
அன்பாக நீர் விட்ட ஆசையாக வளர்த்த
அனைத்து மரங்களும் செடிகளும் கொடிகளும்
தங்கள் சந்தோசம் தொலைத்த மௌனிகளாயின

உங்கள் மீது முட்டி மோதி செல்லம் கொஞ்சி
முகரகட்டை கழுவிடும் கீத்து நிருவும்
உங்கள் ஆசைபேரன் பிரணவனும்
குட்டிப் பேத்தி கவி அரபியும்
கண்களை குளமாக்கி
உங்களுக்கு ஆசையுடன் புகையிலை தந்து
செல்லப்பகிடி கேட்க துடியாய் துடிக்கின்றனர்.

ஏங்கித்தவிக்கும் எங்களுக்காய்
ஓடி ஒரு தரம் வரமாட்டீர்களா?
சிந்தை பல கதை இங்கு கூறினும்
உங்கள் சிங்கார சிரிப்பிற்காய்
செய்வதின்றி தவிக்கின்றேனே
என் அருமை அப்பாவே...!

பேறு பெற்ற புதல்வி
திருமதி கண்ணபிரான் கஜவதனா
(ஆசிரியை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் சிங்கார சிரிப்பைக் காண...

அருமை அப்பா உங்கள் கடைக்குட்டி நான்
திசைகள் யாவும் மறைந்து திகைத்து நிற்கிறேன்
வாய் வார்த்தைகள் வலுவிழந்ததோ தெரியவில்லை
அனைத்துமே பூச்சியமானதாய் எண்ணுகிறேன்
கண்மூடி நிவீர் சொல்லும் கதை கேட்க
கால் கடுக்க நாள் முழுவதும் காத்துள்ளோம்.

உங்கள் சிங்கார சிரிப்பைக் காண
மிடுக்கான நடையைப் பார்க்க
அன்பான தலை வருடலை உணர
ஆசை ஆசையாய் காத்திருக்கிறேன்
அனைத்துமே மௌனித்து விட்டதே
அச்சம் உடலையும் உள்ளகத்தையும் நடுங்கச் செய்கிறது

இடப்பெயர்வுக் காலத்தில் எஞ்சிய என் வருகைக்காய்
ஏங்கி ஏங்கி காத்திருந்தீர்களாமே
எங்களையும் அன்பு பேரன் அக்சயனையும் கண்டு
ஆனந்த கண்ணீர் விட்டு அரவணைத்தீர்களே
அன்று அரவணைத்த கைகளை அள்ளிக்கொள்ள
அனுதினமும் தவித்திருப்பேன்
என் அருமையான செல்ல அப்பாவே!
நீங்கள் ஆறுதலாக துயில் கொள்ளுங்கள்

உங்கள் தடமதில் தலை வைத்து
விழிநீர் சொரிந்து
தேற்றிக் கொள்வோம் அப்பாவே...

பாசமகள் : திருமதி லிங்கநாதன் கலாதேவி
( ஆசிரியை )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையா எங்கள் மாமா

ஆண்டவனே ஐயகையே அருள்மிகை ஆனவரே
யார் இங்கு யாருக்கு ஆறுதல்
நெஞ்சம் பதறுகிறது நினைவுகள் தடுமாறுகின்றன
வாயினின்று வார்த்தைகள் வர மறுக்கின்றன
உம் புகழ்பாட வரிகள் தான் போதவில்லை
என்ன வரம் பெற்றோமோ உம் மருமக்களாய் வந்திட

மக்கள் வேறு மருமக்கள் வேறாய் நீவீர் பாரீர்
எங்கள் உயர்வு படிகளின் படிக்கட்டானீர்
எங்கள் பிள்ளைகள் பேரர் யாவரிலும்
அன்பைச் சொரியும் வற்றாப் பெரும் மரமானீர்!

பெற்றால் தான் பிள்ளையா எனும் வரிக்கு இலக்கணமாவீர்
தன் நலமே சுயநலமாய் வாழ்பவர் மத்தியில்
நான் எனும் வரி தவிர்த்து நாம் என்பதற்கு உரித்தானீர்
தினமதில் ஒரு தடவையேனும் நினைவு கூறா நாளுண்டோ

மாமாவெனும் உறவாக எம்மோடு இணைந்த
எம் பேறுபெற்ற தந்தையாக நீர் இருந்தீர்
கடவுள் எமக்களித்த பேரான பொக்கிசம் நீர்
உம் சிந்னைக்கு வடிவம் கொடுத்து
உங்கள் மக்களையும் பேரக்குழந்தைகளையும்
மான்புறச் செய்வதே நாம் உமக்களிக்கும்
நன்றியென உணருகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திக்காய்
உம் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

பிரியமுடன் மருமகன்மார், மருமகள் மார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவால் துடிக்கும் பேரக்குழந்தைகள்

கொஞ்சும் மழலை உள்ளம் கொண்ட
நெஞ்சம் நிறைந்த எங்கள் தங்கத்தாத்தா
பேரன், பேர்த்தி வளர்ச்சி கண்டு
பெருமை கொள்ளும் சிங்கத்தாத்தா
சிங்க நடை நடந்து சிகரம் தொட்ட
சிங்காரமென எங்கள் தாத்தா
சீக்கிரமாய் எமைவிட்டு சிட்டாக போனதெங்கே

குத்தும் உங்கள் மீசை பட்டு
குதூகலித்து மகிழ்ந்து நிற்போம்
அள்ளி அரவணைக்கும் அன்புத்தாத்தா
அவசரமாக எமைவிட்டு மறைந்ததேனோ
முத்தான கதை சொல்லும் முதுசமே எங்கள் தாத்தா
முகரக்கட்டை கழுவிட வீட்டு
முற்றத்திற்கு தானேனும் வரமாட்டீரோ...

இரக்கமற்ற காலனவன் இங்கு மட்டும் வந்தால்
இம்சையாலே கதறச் செய்வோம்

அன்பு அரவைணப்பு ஆசையான பாசப்பிணைப்பு
அத்தனையும் கற்றுத் தந்த ஆசானே எங்கள் தாத்தா
தங்கள் முத்தான பாதமதில்
முழந்தாலிட்டு அமர்ந்து கொண்டு
எம் வாஞ்சையான இதய நீரால்
காணிக்கையாய் பகிர்ந்து இங்கே
எம் வஞ்சமற்ற நெஞ்சமதில் என்றும்
வாடா மலராய் சூடிக்கொள்வோம்

அன்பு பேரக்குழந்தைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்களை அரவணைக்க மறந்த பூட்டப்பா...

எங்கள் அம்மம்மாவின் அப்பாவே!
எம் அன்னையின் நேசமிகு தாத்தாவே!
நாமறியா தூரத்தில் நீர் இருந்தாலும்
எமக்காக இறைவனிடம் இரஞ்சும் பூட்டப்பாவே!
உமது நெஞ்சிலேறி சவாரிவிட
நேரமது எமக்குக் கிடைக்கவில்லை
நீர் கூறும் குட்டிக்கதை கேட்க
உம் அருகில் வந்தமர வாய்ப்பு எட்டவில்லை
அவை வேண்டுமென ஏங்கியபோதும்
எட்டாக்கனியென அவை மாறிவிட்டாலும்
என்றென்றும் எங்கள் நினைவலைகளில்
வற்றா அன்பு கொண்ட
பூட்டப்பாவாய் வாழ்ந்திடுவீர்

ஏக்கத்துடன் பூட்டப்பிள்ளைகள்

காயங்கள் ஆறிப்போகும்....
கற்பனைகள் மாறிப்போகும்....
கனவுகள் களைந்துபோகும்....
என்றுமே மாறாமல் இருப்பது
நம்மீது அப்பப்பா கொண்ட பாசம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருத்திரபுர தாயின் “ உழவர்கோனே” நீர்

எங்கள் கண்கள் பனிக்க கால்த்தடம் புரள
எங்கும் தேடுகிறோம் பண்பாளன் பசுபதியரை
ஊருக்கு ஒரு உளைப்பாளி காணும்
உலகமே எமைத் திரும்பி பார்க்க
வார்தைக்கு வடிவம் தந்த பசுமையாளன்

வேலிக்கரை நின்று வெறும் ஒரு நோட்டம் விட்டு
கன்றுகளில் என்ன மஞ்சளாயிருக்கு தம்பி
நான் சொன்ன தெளிப்பானை கொஞ்சம் தூவி விடு
எல்லாம் சரியாகும் என்று ஆறுதல் தரும் அண்ணனே
கரைச்சி தந்த “கரையெழில்” காணுமா ஐயா!
ஆடம்பரம் தனை மறந்த அன்பான மாமாவே!
உன்னதமானவரே உத்தமரே
உருத்திரபுரம் வாழ் மக்களாய் நெஞ்சில் மீட்டுகின்றோம்.

**ஊர் மக்கள்**

முயற்சியை எப்போதும் கைவிடாதீர்கள். இன்றைய நாள் கடினமாக இருக்கலாம், நாளைய நாள் மிகக் கடினமாகக் கூட இருக்கலாம், ஆனால் நாளை மறுநாள் உங்கள் வாழ்க்கையை மாற்றும் புதியதொரு விடியலாக மாறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பின்பால் எல்லோரையும் தன்வசப்படுத்தி வாழ்ந்த அற்புத மனிதர்

யாழ்ப்பாணத்தின் தனிப்பெரும் தலைத்தீவாம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் , கிளிநொச்சி மாவட்டத்தின் மரபியல் வரலாற்றோடு இரண்டறக் கலந்த பேரூராம் உருத்திரபுரத்தை வாழ்விடமாகவும் கொண்டு, மனித வாழ்வின் அத்தனை பரிமாணங்களையும் திடமோடு எதிர்கொண்டு, வாழ்வியலின் அனைத்து ஆழங்களையும் நெறியோடு நீந்திக்கடந்து, வாழ்வை வென்ற மனிதனாக வாழ்ந்து மறைந்திருக்கிறார் அமரர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

திரும்புமிடமெல்லாம் துன்பமும், துயரமும், சவால்களும் மண்டிக்கிடக்கும் மனித வாழ்வில், ஒரு மனிதன் தொண்ணூறு ஆண்டுகள் யாருக்கும் தீங்கிழைக்காது வாழ்தலென்பது அசாதாரணமானது! அந்த அசாத்தியத்தைக் கூடச் சாத்தியமாக்கி நம் அத்தனை பேருக்கும் முன்னுதாரணமாக தன் வாழ்வை நிறைவாய் வாழ்ந்து முடித்து, வாழ்வின் நிலையாமையை எமக்குணர்த்தி இறைபாதம் அடைந்த இவரது ஆத்மா அமைதி பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுர மண்ணின் ஆலவிருட்சமாய், அவரும் அவரது குடும்பத்தினரும் தம் ஊரின் உறவுகளுக்காக ஆற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கின்ற பணிகள் அளப்பரியவை. சரித்திரப் பெருமை வாய்ந்த உருத்திரபுரம் சிவன் கோயில், உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோவில் என்பவற்றின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்த ஓர் ஆன்மீகவாதியாய், விவசாயத்தின் மேல் பெரு விருப்புற்றிருந்த ஓர் பாரம்பரிய விவசாயியாய் தனக்கான அடையாளங்களை வரித்துக்கொண்ட இவர், இல்லற வாழ்வின் பேரில் தான் பெற்றெடுத்த ஏழு பிள்ளைகளையும் சமூகத்தில் பெயர்சொல்லி பெருமிதம் கொள்ளத்தக்க நிறையுயர் மனிதர்களாக வளர்த்தெடுத்ததில் ஒரு தந்தையாகவும் தன் பணியை செவ்வனே ஆற்றிச் சென்றிருக்கிறார்.

முழுக்க முழுக்க விவசாயத்தை நம்பி, பொருளாதாரச் சுமைகளும், போராட்ட நெருக்கீடுகளும் நிறைந்திருந்த காலத்திலும் பிள்ளைகள் எல்லோரையும் கல்வியால் உயர்ந்தவர்களாக கரை சேர்த்திருப்பதையும், தன் சொந்த உழைப்பால் மெல்ல மெல்ல மேலெழுந்த ஓர் தனிமனித அடையாளமாக வாழ்ந்திருப்பதையும் நினைக்கையில் மறைந்த பின்னும் அவர்மீதான மதிப்பு பன்மடங்காகிறது.

எனது நெருங்கிய உறவினர் என்பதற்கு அப்பால், அதிபருமான திரு.கண்ணபிரான் அவர்களின் மாமனாகவும் எனக்கும் இவருக்குமான உறவும், ஊடாடலும் எப்போதும் நெருக்கமானதாகவே இருந்திருக்கிறது. இந்த உறவுநிலை நெருக்கம் அவரின் தனிப்பட்ட வாழ்வியல் வளர்ச்சிப் பரிமாணம் குறித்த முழுமையான புரிதலை எனக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது.

இப் பூவுலகில் தான் வாழ்ந்த 90 வருடங்களையும் நிறைவாய் வாழ்ந்து, அன்பெனும் அணிகலனால் தன் குடும்பத்தையும், உறவுகளையும், சமூகத்தையும் அலங்கரித்து, அந்திமகாலம் வரை அவற்றின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் வலுச்சேர்த்து வாழ்ந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை ஐயாவின் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல இறைவனின் பாதாரவிந்தங்களைப் பணிந்து அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
கிளிநொச்சி

சி.சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்.
யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்.
இல : 882, ஆறுமுகம் வீதி.
வட்டக்கச்சி, கிளி...

> வாழ்க்கையில் கிடைக்கும்
> மிகப்பெரிய வெகுமதி
> தந்தையின் அன்பை
> முழுமையாக கிடைக்கப் பெற்றவர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சுருகும் நினைவுகள் நிழல் தந்த பேரால விருட்சம்

எங்கள் ஊரின் பெருவிருட்சம் வீழ்ந்த
செய்தி பேரதிர்ச்சியே!
அன்பும் அறமும் வாழ்வாய்க் கொண்டு
வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளர்
இன்று எமை எல்லாம் துயரில்
ஆழ்த்தி இறையடி இணைந்துவிட்டார்
துயர் சுமந்து துடிக்கும் அவரது
பாசவுறவுகளோடு நாமும் துயரம் பகிர்ந்து
அஞ்சலிக்கின்றோம்.

ஆத்மார்த்த அஞ்சலியைச் செலுத்தி
இறைவனை ஆத்மசாந்திக்காய்
பிரார்த்திக்கின்றோம்.
நேர்மை கண்ணியம் விடாமுயற்சி
சமூக நலன் சார்ந்த கூரிய பார்வை
பொதுப்பணிகளில் அறப்பணிகளில்
ஆற்றியசேவை மறக்கமுடியாத
அனுபவங்கள் நகைச்சுவையால்
எதையும் எடுத்துரைக்கும் பேராற்றல்
இவருக்கு நிகர் இவரே
இவரது விழுதுகள்
( மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்)
அறிவாற்றல் மிக்கவர்களாகவும்
மனிதநேயர்களாகவும் மதிக்கத்தக்க
மாணிட விழுமியங்கொண்டவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வருவது இவரது வாழ்ந்து காட்டலே
அதற்கேற்ற நல்ல துணையாளின்
இணைவும் இவரது பெரும்பேறே
இந்த மாமனிதரின் இழப்பு மனதிற்கு
பெரும் வலியானது ஆயினும் விதியின்
வலிமையை மாற்றமுடியாதே
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவர்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
என்ற வள்ளுவர் வாக்கினோடு
ஆறுவோம் ஆற்றுப்படுத்துவோம்.

கலா கணேசன்
திரு. கந்தையா கணேசலிங்கம்
பிரதேச சபை உறுப்பினர்,
உருத்திரபுரம் வட்டாரம்.

கண்ணில் கோபத்தையும்
இதயத்தில் பாசத்தையும்
வைத்திருக்கும் ஒரே உறவு
அப்பா....

தந்தையே எனக்கு மீண்டும்
உன்னிடம் குழந்தையாக
மாறி உன் பாச
அரவணைப்பில்
மிதந்து கிடக்க ஆசை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரில் கண்ட பாரசீகர்

சிறுவயதில் சிரிக்கத்தெரிந்த பாரசீகர் என்ற பாடத்தில் வாசித்த கதைகளைக் கண்டு அந்த மக்களுக்கே அது சொந்தமானது என்று எண்ணியதுண்டு. இப்போது அதன் தோற்றுவாய் அமரர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளையின் மூதாதையரோ என்று எண்ணியதுண்டு. மனிதனுக்கும் பிற விலங்குகளுக்கும் வேறுபாடு கோரும் போது அதன் முதன்மையானது சிரிப்பு என்பார்கள். அதன் அறிவியல் உண்மையை மனித கூர்ப்பின் உச்ச பரிமாணத்தை காணும் அற்புத முகம் எங்கள் தாத்தோ

**தாத்தோ....... தாத்தோ........ தாத்தோ.........**

என்ற பேரப்பிள்ளைகளின் தாத்தா எங்கள் வழிகாட்டி ஆசானின் உடல் தற்போது எம்வசம் இல்லை. இதனை காக்க முடியுமான முயற்சிகள் நடைபெற்றது. அறிவுக்கு மீறி ஆசைப்படவேண்டிய மனித உடல், அவர் தம் உருவம் அந்த அற்புத உருவம் இன்று அருவமாகி உள்ளார்.

தாத்தா பரம்பரை பரம்பரையாக எனது மூதாதையரின் நெருங்கிய உறவு. நெடுந்தீவு பங்கு என்ற கணிதச் செய்கைக்கு உரித்தான தெனலாம். பங்குகளாலேயே பிணைக்கப்பட்ட அற்புத மனித குழுமம். அந்த பங்குகளின் உரிமைப் பங்குகொண்ட, காணிப்பங்கு கொண்ட மிகக் கிட்டிய உறவுக்காரர் பசுபதி தாத்தா என்று எனது அப்பா பங்குகளால் பிணைத்துக்கூறியுள்ளார். அது அப்படியே இருக்க

**நான் கண்ட பாரசீகர் பற்றிய காலக்குறிப்புகள் சில**

- ❖ எதற்கும் ஒரு சின்னச் சிரிப்பு.
- ❖ மந்திரி நல்லம்மா அவர்கள் சற்று ஏதும் அதிகம் கதைத்தால் ஓம் ஓம் நீர் சொல்வது சரியென்று ஒற்றை வார்த்தையில் குடும்பத்தை நடத்திய தலைமை.
- ❖ சமத்துவம் சம வாழ்வு என்பதற்கு நல்லம்மா அவர்கள் கண்ட பால்நிலைச் சமத்துவம் போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வார்த்தைக்கு முன் சிந்தனை சற்று வழுக்கினால் புதிய வியாக்கியானம் கொண்டு சீர் செய்யும் ஆற்றல்.
- கால்நடை, வண்டில், துவிச்சக்கர வண்டி, உழவு இயந்திரம் என்ற பரிமாணங்களை வாழ்நாளில் நீண்ட பயணங்களால் மிக சுவாரஸ்யமாக அனுபவித்தவர்.
- இவருக்கு வியர்வை உற்ற நண்பன் ஆனால் வெளிப்படா நண்பன்.
- மனிதனின் ஆரோக்கிய உரையாடலுக்கு எவ்வளவு வலிமை உண்டு என்பதனை இவர் தரும் கதை மருந்தால் நோய் தீர்த்த நபரில் நானும் ஒருவன்.

பழைய கதைகளில்

வண்டில் புரண்டது, உழவு இயந்திரம் கவிழ்ந்தது, இரவு சூட்டடி, வைக்கல் போர் நித்திரை, துவிச்சக்கர வண்டி பயணத்தால் பல மாவட்டங்களைக் கடந்து ஊர்கள் நோக்கிய பயணத்தில் வழி வழியே தரிப்பிட உறவுகள், பயணித்த நீண்ட பெரிய காட்டு வழியில் உள்ள நண்பர்கள் அவர் தம் உறவு நாம் அறியாமலே இவர் பிரிவால் அழுவர்.

ஒரு மனிதனால் இவ்வளவு வாழ்வு வாழ முடியுமா? என்பதற்கு இவர் உதாரணம் இதனால் தான் இந்த அனுபவ பொக்கிசத்தை இழக்க எல்லா மனங்களும் மறுத்தன. இதையும் கடந்து பிறப்பு, இறப்பு பற்றி இவர் எப்பவோ நன்கு உணர்ந்தவர். அதனால் தான் காலத்தைக் கணக்கு போட்டு ஒரு கால அட்டவணையை தயாரித்து வாழ்ந்தவர். இதனால் இவருக்கு அந்தரங்கள், அவசரங்கள், புரல்வுகள் ஏற்படவில்லை. இயற்கையை மிகவும் கவனமாக பயன்படுத்தியுள்ளார். இவர் தம் அறிவு உணர்வுகளுக்கு புதிய பாதைகளை அமைத்துக்கொடுத்தது.

இவரின் வாழ்க்கை அட்டவணையில் மனித குழந்தை பிறந்து ஒரு வருடத்தில் நடை பயிலத்தொடங்கும். இந்த கால்கள் ஓய்ந்து போகும் போது உறக்கம் வரும் . மீண்டும் எழுந்து நடக்கும் அவ்வாறான ஒரு நாள் அயலவரின் இறப்புக்குச் சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றிரவு அவர் தம் இல்லத்தில் உறவுகளைக் கண்டு மறுநாள் வீடு வந்து ஓய்வெடுத்தும், மீளெழுந்தும் அந்த எழுகையில் சுற்றுத்தளர்வு வந்ததும் அந்த தளர்வு தொடர்ச்சியா, தற்காலிகமா என்பது பற்றி பரிசோதித்து அதில் உள்ள சில உண்மைகளை உள்ளார்ந்து உணர்ந்து எதையும் அலட்டிக்கொள்ளாது இன்னும் சில காலங்களில் (நாட்கள்) சுற்றியுள்ளவர்கள், தன் பிரிவைத் தாங்க முடியாத உறவுகளுக்காக மௌனியாக, கேட்டல் குறைவு உள்ளவர். போல் வாழத்தொடங்கினார். அந்த இறுதிக்காலங்களில் திடீரென "மாமா சற்று தளர்வடைந்து விட்டார்" என்ற மருமகன் கண்ணபிரான் அவர்களின் செய்தியைக் கேட்டு ஓரிரு நாட்களில் வீடு சென்றேன்.

வழமையான படுக்கைதான் ஆனால் இடம்வேறு, கட்டில் வேறு, எனக்கு சற்று புழுக்கமாக இருந்த போதும் தாத்தா அது நான் தயாபரன் என்றேன். வழமை போல் அந்த பாரசீகர் என்பக்கம் புறண்டு கை தந்தார். அப்போது உரத்த சத்தங்கள் "தாத்தா இவ்வளவு நேரம் நாங்கள் கூப்பிட பேசாமல் இருந்து விட்டு மாமா கூப்பிட கதை வருகிறது." ஆனால் அன்றைய கதை வறையறுக்கப்பட்டது.

சற்று நேரம் எடுத்து வழமைக்கு மாறாக எழும்புவதற்கு உதவி தேவையாயிற்று. பாரசீகர் எழுந்தார். இவ்வளவைக்கு என்னவாம் ஏதோ காலடியில் சுத்துறாளவ என்று கட்டிலைப்பற்றி கலாய்த்து விட்டு எனது நீண்ட யோசனைக்கு மருந்து தந்து சிரித்து விட்டு இருந்தார். அப்போது படுக்கையில் இருக்கும் போது கால் எலும்புகள் இறுகி விடும் என்று நான் கூற அவர் நடைக்கு விடை என்றால் போல் கண் சிமிட்டி வாய்அசைத்தது இன்னாளில் என்னால் உணர முடிகின்றது. இதற்கு பின்பு சுற்றியுள்ள எல்லா உறவுகளுக்கும் மரண கால பயிற்சி வழங்கப்பட்டதாகவே நான் உணர்கின்றேன். பேரன்மார் ஒரு மனிதனை தனியாக தூக்கும் பலம் பெற்றுவிட்டானா என்பதை பரீட்சித்தமையை வைத்தியசாலைக்குச் செல்லும்போது பிரணவனோடு கண்டுகொண்டேன். அக்கா, தங்கை, தம்பி, அண்ணா இணைப்பை வலுப்படுத்தி வழமை போன்று சற்று கூடுதல் இணைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மகளோடு, அமரர் பசுபதிப்பிள்ளை ரவீந்திரநாதன் அவர்களின் இணைவால் வீட்டிற்கு வந்த மருமகன் என்றும் மகனாக என்னும் கண்ணபிரான் அவர்களுடன் தனியான பங்கெடுப்பு வாழ்விற்காக நோதொன் வைத்தியசாலை சென்று பன்னிரு நாட்கள் ஒரே அறையில் இருந்து மரணத்தின் உண்மைப்பற்றியும், தவிர்க்கமுடியாமை பற்றியும் மீள் எழுதலில் தேவை பற்றியும் உணர்த்தி மரண உரம் ஏற்றி வீடு வந்ததாகவே நான் உணர்ந்தேன். இதற்கிடையில் தூரதேசத்தில் இருந்த இன்றைய தலைமகன் குகநாதன் அவர்களை அழைத்து பொறுப்புக்களை ஒப்படைத்து கடைமைகளைச் செய்வதற்கு வாய்பளித்து இறுதி நேரத்தில் வாய்மேல் வாய்வைத்து ஊதி ஊதி உயிர்தேடிய பொழுதுகளை உருவாக்கி கால முடிவை உணரச்செய்து மகனோடு, மகளும் மற்றோரும் மனம் உறுதிபெற, மருமகன் கண்ணபிரான் பேரப்பிள்ளைகள் அருகிருக்க தாத்தோ அந்தப்பொழுது விடைபெற்றுச் செல்கிறார் என்பது ஆரபி, நிருவுக்கும் புரியவில்லை. அப்போது காலை விடைகொடுத்து மாலை தேநீருக்கு வந்துவிடுவேன் என்று புறப்பட்ட கீர்த்தனி பணிநடுவே ஓடிவந்து மறைந்த உண்மை பொய்யென்று உயிர் திருப்புவேன் என்று கதறிய பொழுதில் கண்திறந்திருப்பாரோ? பிரணவன் தாத்தாவுடன் கலந்திருந்து உடல் தேறியதாய் எண்ணி கல்விக்காய் தலைநகர் செல்ல விடைபெற்ற போது உண்மை புரியவில்லை அவனுக்கு. தாத்தா எல்லாம் புரிந்தும் வாழ்வுக்காய் வழியனுப்பினார். செய்தி அறிந்து வீடுவந்தும் நெஞ்சடைத்திருந்தான் அவர்மேனி சுமந்தான் கதறியழவில்லை இன்னும், தூர தேசம் இருந்த பிள்ளைகள் எல்லாத்தேசமும் பரந்து கிடந்த உறவுகளை கூவி அழைத்து இரு நாள் காத்திருந்து புறப்பட்டார். சென்றுவாருங்கள் தாத்தா இந்த மறுபிறப்பு வாழ்வில் மீண்டும் மீண்டும் இணைவோம் என தோளில் சுமந்த பேரன்மார்கள், உறவுகள். இவர் இறுதி ஊர்வலம் அவர்தம் வாழ்வின் அன்பைக் காட்டிற்று.

கண்கண்ட பராசீகரே சுழன்று வருவோம், இணைவோம்.

சுந்தரமூர்த்தி தயாபரன் (ஆசிரியர்)
பிரதேசசபை உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழவர்கோன்

## அமரர். திரு.கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை.

மேழி பிடிக்கும் கை வேல்வேந்தர் நோக்கும் கை
ஆழி தரித்தே அருளும் கை - சூழ்வினையை
நீக்கும் கை என்றும் நோக்கும் கை – நீடுழி
காக்கும் கை காராளர் கை. ஆம்

இங்கு கூறப்படும் காராளர்களே கார்(கறுத்த) முகிலை ஆள்பவர்கள். இவர்கள் நினைத்தபோது கார்முகில் மழையாகிப் பொழிகிறது. அதேபோன்று ஒரு இல்லக் கிழத்தியும் செயற்படுவதால் அவளைப் பெய்யெனப் பெய்யும் மழை என்றார் உலக மெய்யியல் தந்த வள்ளுவனார். அதுமாத்திரமல்ல, இவர்கள் வயலில் இறங்கி வேளாண் தொழில் செய்வதால் அதிகநேரம் கொடு வெய்யிலில் செயற்படுவதால் இவர்கள் உடல் கறுப்(கார்)படைகின்றது. அவன்தான் பிறப்பால் உண்மைத் தமிழன். எனவேதான் இவர்கள் இரண்டுவகைக் கருத்துக்கும் உள்ளாகின்றனர்.

இன்னொருசாரார் வீட்டில் இருந்துகொண்டே கூலிகளைக்கொண்டு வேளாண்மையில் ஈடுபடுவால் அவர்கள் சற்றறு நிறமானவர்களாக காணப்பட்டதால் இவர்களை வெள்ளாளர் என்றனராம். ஆனால் இவ்விரு பகுதியினரையுமே வேளாளர் என்றனர். அதாவது மண்ணை(வேள்) ஆள்பர்கள் என்றனர். எனவே அமரர் திரு. பசுபதி ஐயா அவர்கள் கிட்டத்தட்ட 60 ஆண்டுகளுக்குமேல் இந்த மண்ணையும், விண்ணையும் ஆண்டு, நமக்காகவும், இந்த மண்ணின் மக்களுக்காகவும் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்தவர். இவர்கள் தான் நம்மொழியைப், பண்பாட்டை, வரலாற்றைக் கட்டிக் காத்து வளர்த்தவர்கள். வளர்க்கின்றவர்கள். "சிரிப்பை விடு அழுகையை நேசி" என்ற கொள்கையில் வாழ்ந்து, "ஒருபிடிசோற்றில் உலக ஒற்றுமை கண்டிடு உழைப்பால் அதை உலகிற்கு ஈந்திடு" என்ற வினைத்திட்பம் காட்டி, வாழுகின்றவர்களுக்கு வாழ்ந்தவர்கள் பாடம் என்பதை உறுதிசெய்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்குலத்தின்கண் ஐயப்படும் (குறள்) என்பார் பெருநாவலர் வள்ளுவனார்.

(நலம்- மொழி, இனம், நாடு(மண்), நாரின்மை- பற்றின்மை)

மரணம் உறுதியானது. சிலரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததுதான். ஆனால் அவர் விட்டுசென்ற எச்சம் தான் ஓரளவிற்கேனும் நமக்கு மன ஆறுதலை, மன நிறைவைத் தரவேண்டும். இங்கு எச்சம் என்றது, அவர் வாழும் காலத்தில் சம்பாதித்துக்கொண்ட புகழ் என்றும், அவரின் பிளைகள் ஊடாகப் பெற்றுக்கொணட புகழைப் புகட்டுவதாகவும் வள்ளுவனாரின் குறள்கள் வெளிப்படுத்துகின்றன.

மனநலம் மன்னுயிர்க் காக்கும் இனநலம் எல்லாப் புகழும் தரும் (குறள்) என்கின்றார் பொய்யாமொழியார் வள்ளுவர். ஆனாலும் மூவாயிரம் தமிழ் தந்த திருமூலனார் தமது திருமந்திரத்தில்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகும் கதியில்லை நும்சித்தத்து
நன்றே நிலைபெற நினைந்து உய்மின்.

இவற்றிற்கெல்லாம் இலக்கணமாய் வாழ்ந்தவர் தான் அமரர் திரு.க.பசுபதிப்பிள்ளை ஐயா அவர்கள்.

அமரரவர்கள் வாழும் காலத்தில் இக் குமுகாயச் சூழலில் உருத்திரபுர மக்களுக்காற்றிய, சிவநகர் சிவன்கோயிலும் ஆற்றிய தொண்டுகள் அளப்பரியவை எனப்பெருமைபட கூறுகின்றார் அன்பர் தெய்வேந்திரமவர்கள். அவர்காலத்தில்தான் தான் அவரின் உதவி ஒத்தாசைகளின் மூலம் தன்னையும் கவர்ந்து, சிவத்தொண்டில் ஈடுபடவைத்ததாகவும் கண்ணீர் மல்க விளம்புகின்றார். உருத்திரபுர மண்ணிலே இவர்போன்ற பலர் மறக்கப்பட்டும், மறைக்கப்பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதாகவும், இவர்கள் வாழும் காலத்திலும்(பிற்பட) சரி, அவர்கள் அமரத்துவம் அடைந்தபின்னும் சரி போற்றப்படுவதில்லை என்ற தனது மனவுளைச்சலை வெளிப்படுதுகின்றார். இதுதான் இன்றைய நிலைப்பாடும், நடப்பியல்(யதார்த்தம்) என்றும் கூறிடினும் அதுமிகையாகாது.

எமது குடும்ப நிறுவனமான இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம் 2013ஆம் ஆண்டு தைப்பூச நன்னாளிலே கிளிநொச்சி பைந்திர(பிரதேச)சபை மண்டபத்தின் இரா. தானியல் நாகலிங்கம் அரங்கில் அப்போது சபையின் தலைவராயிருந்த என்னருமைத் தம்பி அமரர் நா.வை.குகராசா தலைமையில் நடைபெற்ற நூல்கள் வெளியீட்டு, மூத்த சான்றோர், கலைஞர் நன்மதிப்பு நிகழ்வில் ஐயா அமரர்.திரு.கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை அவர்களும் கரைச்சிப் பகுதியின் மூத்தகுடியாகவும், உழவுத் தொழிலையும் முன்னிலைப்படுத்தியும் வாழ்ந்ததால் அவருக்கு "உழவர்கோன்" என்ற சிறப்புப் பட்டம் அளித்து நன்மதிப்புச் செய்யப்பெற்றார் என்றது இங்கு குறிப்பிடத் தக்கதாகும்.

ஐயா அவர்கள் விகடமாகப் பேசுவதில் அவருக்கு நிகர் அவரென்றே கூறமுடியும்.

அகவை முதிர்ந்த காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற ஒருவரின் மனம் எப்படி இருக்கும் என்பதையும், ஒருவர் எப்படி வாழவேண்டும் என்பதையும் 1913ஆம் ஆண்டின் இலக்கியத்திற்காக மீ உயர் பரிசான நோபிள் பரிசை தன் தாய்மொழி(வங்கம்)யில் பாடிப் பெற்றவரான கீதாஞ்சலி புகழ் இரவீந்திரநாத் தாகூர் அவர்கள் தமது கவிதை வரிகளில் பின்வருமாறு கூறுகின்றார்.

நான் இறந்துவிட்டேன் என்று கேள்விப்பட்டதும் நீங்கள் கண்ணீர சிந்துவீர்கள் ஆனால அதை நான் காணமாட்டேன் ஆகையால் நான் உயிரோடு இருக்கும்போதே வந்துபேசி கண்ணீர் விடுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்செண்டு அனுப்புவீர்கள் அதை என்னால் பார்க்க முடியாது. ஏன்னைப் புகழ்ந்து புகழாரம் சூட்டுவீர்கள் ஆனால் என்னால் அவற்றைக் கேட்க முடியாது எனவே நான் உயிருடன் இருக்கும்போதே நேரில் வந்து பாராட்டுங்கள்.

இறந்த செய்திகேட்டு என் முகவரி எடுத்து வழிதேடி வருவீர்கள், ஆனால் நாம் பலவாண்டுகளாக சந்திக்கவில்லை, பேசவில்லை. நான் உயிருடன் இருக்கும்பேதே வந்து சந்தியுங்கள், பேசுங்கள்.

அயலவரோடு, நண்பர்களோடு, உறவுகளோடு, தெரிந்தவர்களோடு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பேசுங்கள், அவர்களின் சிறப்புக்களை, மேன்மைகளை உணரச்செய்யுங்கள். காலம்கனியும்போது அவர்களுக்கு உதவுங்கள்.

சேர்ந்தே சிரியுங்கள், சேர்ந்தே கொண்டாடுங்கள், பட்டறிவை பகிர்ந்து கொள்ளுங்கள். அதுவே மாந்த அறிவு, அழகு என்கின்றார்.

ஐயா அவர்கள் கடைசி காலம்வரை தன்னைச் சூழ்ந்து வாழ்ந்த கு(ச)முகாயத்துடன் சேர்ந்தே வாழ்ந்தார். அவர் தனிமையை பட்டறியவில்லை என்றே கூறமுடியும்

மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும் (குறள்)

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்து தன் ஓட்டத்தை ஓடி முடித்துள்ளார். நாமும் அவர் வழி நிற்போம். அவர் என்றும் வாழ்வார். அவரின் வாழ்வு அவரின் மனைவி, பிள்ளைகள், உறவுகள், அயலவர், நண்பர்களுக்கு மன ஆறுதலை, அமைதியை தரட்டும்.

வாழ்க அவர் பெயர்!

**நா.வை.குமரிவேந்தன்(மகேந்திரராசா)**
**நிறுவநர், இலங்கைக் குமரித் தமிழ்ப்பணி மன்றம், கிளிநொச்சி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்களுக்கு தலைவனாக வாழ்ந்து காட்டிய ஐயா பசுபதிப்பிள்ளை

இலங்கைத்தீவின் வடதிசையாக அமைந்த யாழ்ப்பாண குடாநாட்டின் பக்கத்தே அமைந்த பசுந்தீவு, முல்லைத்தீவு என பலவகைப் பெயரினைக்கொண்ட நெடுந்தீவு தன்னில் கார்த்திகேசு என்பவருக்கு மகனாக பசுபதிப்பிள்ளை ஐயா பிறந்தார்.

இவர் சிறந்த விவசாயி இவர் தனது விவசாயப் பற்றால் உருத்திரபுரம் கிழக்கு எனும் அழகிய கிராமத்தை தெரிவுசெய்து வாழ்ந்து வந்தார்.

அறிவு, ஆற்றல், ஆளுமை, ஆன்மீகம் என்பவற்றால் வலிமை பெற்ற மனிதனாகவே அவர் வாழ்ந்தார். இவரது வாழ்வு முழுமையாக உருத்திரபுர மக்களதும் மண்ணினதும் வளர்ச்சியோடும் வரலாற்றோடும் இரண்டறக் கலந்திருந்தமை அனைவரும் அறிந்ததே. உருத்திரபுரம் கிராமத்தின் பல்துறை வளர்ச்சி பரிணமத்திலும் ஒரு விவசாயியாய் (மூத்தகுடி மகனாய்) ஊர்ப்பணியாற்றும் பிள்ளைகள் இந்த உலகிற்கு தந்த தந்தையாய் இவர் திகழ்ந்தார்.

எப்போதும் சிரித்த முகத்தோடும் மற்றவர் துன்பம் கண்டு நெகிழும் உள்ளம், உரத்துப் பேசியறியாப்பக்குவம் வயதுக்கும் வாழ்க்கை முறைக்கும் உரித்தான அனுபவ அறிவு எதையும் நேருக்கு நேர் சொல்லி விடுகின்ற நெஞ்சுரம் தோற்றத்தாலும் மனதாலும் பேணி வந்த தூய்மை அடுத்தவரை அரவணைக்கும் பாங்கு மனதாலும் பிறருக்கு தீங்கிழைக்காத மனிதப் பண்போடும் இன்பமொழி பேசி இதயங்களைக் கவர்வதும் இவரது ஆழுமைக்கு வித்தாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரது பெயர் கூட பசுவைப்போன்று உயிர்ப்பாகவும், பதியைப் போன்று நாளைய ஓர் தலைவனாகவும் அமைகின்ற காரணத்தினாலோ இவரது தந்தை இவருக்கு பசுபதிப்பிள்ளை எனும் பெயரை வைத்துள்ளார்.

நான் இந்து ஆரம்ப வித்தியாலயத்தில் முதல் அதிபராக நியமிக்கப்படும் பொழுது அக்காலத்தில் எனது பணி சிறக்க தனது மகளான கஜவதனா கண்ணபிரான் என்பவரது சேவை மிகச் சிறப்பானது. அத்துடன் கஜவதனாவின் நல்ல துணைவர் கூட எனது சிறந்த நண்பர்களில் ஒருவர். இவரது பேரப்பிள்ளைகள் கூட என்னுடன் மட்டுமல்ல என் குடும்பத்தவர்களுடனும் கூட இனிமையாகப் பழகும் சுபாவம் கொண்டவர்கள்.

இவர் ஒன்பது தசாப்தங்களாக எனது கிராமத்தில் வாழ்ந்து இறைவனை அடையும் போது கூட இறுதி காலத்திலும் என்னுடன் அன்பாகக் கதைத்துச் சென்றவர்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

மகேசன் உமாசங்கர் - அதிபர்
அகில இலங்கை சமாதான நீதவான்
உருத்திரபுரம் கிழக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புன்சிரிப்பால் எல்லோரையும் ஈர்த்துக்கொள்ளும் சுபாவமுடையவர்

நெடுந்தீவிலிருந்து வன்னி நிலப்பரப்பு வரையான வரலாறுகளைக் கேட்டறிந்து கொள்ள எம்முடன் வாழ்ந்த ஓர் உன்னத மனிதரை நாம் இழந்து நிற்கிறோம். சிறந்த முன்னோடி விவசாயச் செய்கையாளராகவும், சைவ சமயக் கிரியைகள் மற்றும் கோயில் சம்பந்தமான விடயங்களில் பற்றுணர்வும், பங்காற்றுகையும் கொண்ட ஒரு நல்ல பொதுச் சேவையாளராகவும் மிளிர்ந்தவர்.

சிறியோர் புன்சிரிப்பால் எல்லோரையும் தன்பால் ஈர்த்துக்கொள்ளும் சுபாவம் இவரிற்கு கைகூடியிருந்தது. சிறுபிள்ளையாயினும் கதை சொல்லிச் சிரிக்க வைத்து ரசிப்பவர் பெரியவர்கள் மத்தியிலே ஆலோசனை வழங்கும் உத்தம புருசனாகவும் காணப்பட்டவர்.

மிகவும் எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடித் தொழுகிய ஓர் உத்தமர். சிறந்த குடும்பத் தலைவராகவும், அன்னை தந்தையராகவும் இருந்து தமது பிள்ளைகளிற்கு கல்வி புகட்டி அரசதொழில் புரிபவர்களாக உயர்த்தி மகிழ்ந்தவர். சிறப்பான நற்குணம் கொண்ட மருமக்களைத் தேர்ந்தெடுத்து சிறப்புற்று இன்புற்றவர்.

பேரக்குழந்தைகளுடன் சலிக்காது எந்நேரமும் அளவாளவி மகிழ்ந்தவர். சகோதர சகோதரிகளுடன் மிக அன்புடனும் அரவணைப்புடனும் வாழ்ந்தவர். கோபம் கடுஞ்சொல் எனும் வார்த்தைகளை கண்டறிந்ததில்லை. இப்பரம்பரையில் வந்துதித்த உத்தமர்களிடம் இவ்வாறு நோய் நொடியின்றி 90 ஆண்டுகாலம் இனிதே வாழ்ந்த ஓர் பண்பாளரை நாம் இழந்து நிற்கிறோம். இவ் இழப்பு நம் எல்லோருக்கும் பேரிழப்பே ஆகும்.

ஐ.இராஜரட்ணம் (ஓய்நிலை அதிபர்)
பெறாமகன் : ஐந்தாம் வீடு, உருத்திரபுரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்சிமிட்டி பேசிய கருணை

வயல் விளைந்து  வீடு வரும்
வயிறு நிறைய சோறு தரும்
கயல் துள்ள நீராடும்..
சித்திரையில் தேரோடும்...
முத்திரை இல்லாமலே முகமறியும் முகவரி...
எட்டாம் வாய்க்காலில் இவர் பெயர் முதல்வரி...
ஐயா பசுபதி
பண்பின் வெகுமதி
மெல்ல கண் சிமிட்டும் புன்னகை
அயலவர் அன்பில் பெருந்தகை
வெண்தலை
மனதும் அதே நிலை
வாயில் சுருட்டின் புகை
இவருடன் யாருமில்லை பகை
நாகலிங்கம் வாத்தியார் இவர் அண்ணன்
நல்லம்மா குடும்பத்தின் மன்னன்
உருத்திரபுரீச்சரத்தின் உன்னத பக்த்தர்
பொறுமையில் ஒரு சித்தர்
பிள்ளைகளின் நல்ல தந்தை
என்னில் உங்கள் சிந்தை
கண்மூடித்தூங்கும் கருணையே
உங்கள் பாதங்களில் என் கண்ணீர்த் துளியின் காணிக்கை.

அ. பிரியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்கமுடியாத பண்பாளன்

பசுந்தீவாம் நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் உருத்திர புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர்.கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை அவர்களின் மறைவுச்செய்தி அறிந்து மிகவும் மனவேதனையுற்றேன்.

"கதங்காத்து கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து"

கல்வி கற்று, மனதுள் கோபம் கொள்ளாமல் காத்து, அடக்கமாக வாழும் ஆற்றல் கொண்டவனை அடைவதற்கான நேரத்தை எதிர்பார்த்து அறம் அவன் வழியில் காத்திருக்கும் என்பதற்கிணங்க பல அறப்பணிகளை ஆற்றியவரை இறைவன் தன்னகத்தே அழைத்துக்கொண்டார். எந்நேரமும் அவரது முகத்தில் தவழும் புன்சிரிப்பு காண்போரை அமைதிப் படுத்தவல்லது.

இடப்பெயர்விற்குப் பின்னர் மீள்குடியேறிய காலப்பகுதியில் உருத்திரபுர சிவாலய வளாகம் மிகவும் பற்றைக்காடாக காட்சியளித்ததைக் கண்டு தனியொரு மனிதனாக ஆலய வளாகத்தில் தங்கியிருந்து துப்பரவு செய்து மரக்கன்றுகளை நாட்டி செப்பனிட்டார்.

அத்துடன் உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் அன்னதானசபை, மற்றும் நிர்வாசகசபை உறுப்பினராகவும் இருந்து ஆலய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றியுள்ளார். ஜெயந்திநகர் மீனாட்சியம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய கும்பாபிஷேகம் நடைபெறப்போவதை அறிந்து ஆரம்பநாள் தொடக்கம் மண்டலாபிஷேகம் வரையான சமுத்துக்குரிய பொருட்களை தனிமனிதனாக நின்று சேகரித்து ஆலயத்திற்கு ஒப்படைத்து உதவியதை மறக்க முடியாது.

இவரது குடும்பம் சைவத்திற்கும், தமிழுக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய பணி அளப்பரியது. அவர் இம்மண்ணிலிருந்து மறைந்தாலும் என்றும் எம் நெஞ்சங்களில் நிலைத்திருப்பார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றேன்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

திரு.சு.பசுப்பதிப்பிள்ளை
முன்னால் மகாணசபை உறுப்பினர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்தும் மறையா மானுட நேயன்

## பசுமையாளன் "உழவர் கோன்" கா.ப வின் நினைவாக...

திருவாளர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை

"வையத்துள் வாழ்வாங்கு வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் பொய்யா மொழிக்கேற்ற இளையவனுக்கும் தன்குலத்திற்கும் உற்றவர் , உறவினர் ஈராக இவ் வையகத்தாருக்கும் அன்பு, பண்பு அரவணைப்பு மானுட நேயம் இறைபக்தி அனைத்திற்கும் எடுத்துக்காட்டாய் வாழ்ந்து இவ்வுலகை நீர்த்த சீமானே உமக்கு கனத்த இதயமதில் என் அஞ்சலிகள். பிறப்பெடுக்கும் உயிர்கள் யாவற்றிற்கும் இறப்பென்ற ஒன்று நிதர்சனமாயினும் இறப்பை இன்னுயிர்கள் ஏற்பதில்லை.

தூரத்தே யான் பிறந்து வளர்ந்திருந்தாலும்
உங்கள் அன்பினால் கட்டுண்டு
என் வரிகளில் சிலதை பகிர்கிறேன் இங்கு.

ஞாலம் விரும்பும் நல் வித்தாய் வந்துதித்து
பாரிற்கு நிழல்தரும் பரந்த ஆழவிருட்சமாய்
கிளைகள் பலதை பரப்பி
விழுதுகள் சிலதை
தரணியில் தளைக்கவிட்டு
அவையனைத்தும் நிரந்தர தூண்களாக
நீத்திரே உமை.
தவமிருந்தும் பெறமுடியா நற்பண்புகளையும்
நேசிப்பவரை பிரித்தறியா
குணம்கொண்ட பேரன்பு அத்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்மிடமே வைத்திட்ட உன்னதரே
உமை அறிந்த காலங்கள் ஆண்டுகள் பதினைந்தாகினும்
ஊரவர், அயலவர், உறவுகள் சான்று கனரும் கதைகேட்டு
கட்டுண்டேன்
உங்கள் வேளாண்மை புலமைக்கு.

ஆவுடை, நிரை வைத்து அன்புடமை கொண்டிருந்தீர்
வேளாண்மைக்கு விருதுகள் பெற்று துறை புகழானீர்.
கோயில் குளம் மெச்சும் பெரும் இறை தொண்டாளனே
சீரான வாழ்வினை நீர் வாழ்வாங்கு வாழ்ந்திங்கே
சிறகொடிக்கும் காலன் பிடியில் கட்டுண்டீர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறைந்தீர்
பொதுவுடைமை விரும்பியாக புகழ்பாட எழுதவில்லை.
மானுட நேயங்கள் மறைந்தொழியும் நேரமதில்
உதாரணமான உம் மாண்பை வரையாவிட்டால்
மானிட நேயமது மறைந்துவிடும் வெகுவிரைவில்.

ஊர்க்கூடி தேர் இழுத்து கண்ணுற்ற எனக்கு உருத்திரபுரத்தின் தேர் பாகனாய் உமை ஊரார், உறவினர், யாவரும் ஒரு சேரராகி தேர்காலாய் ஒன்றிணைந்து தோள்சுமந்து விடை பகர்ந்து விழி சொரிந்தாரா உறங்குங்கள் அமைதியாக....

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி!!!

**அன்பின் நேயனாக வவுனியாவிலிருந்து**

**கதிர் நித்தியானந்தராஜா**
**2022.04.02**

**" யாதும் ஊரே , யாவரும் கேளீர்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார் பாடல்

நினைமின் மனனே ! நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !
அலகைத் தேரின் அலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை உடலை ஓம்பற்க ! 1

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன உணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும் 2

அருந்தின மலமாம், புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்
என்றிவை அனைத்தும் உணர்ந்தனை அன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிகள் தோறும்
கொன்றனை அனைத்தும், அனைத்து நினைக்கொன்றன. 3

தின்றனை அனைத்தும், அனைத்து நினைக் கொன்றன்
பெற்றனை அனைத்தும், அனைத்து நினைப் பெற்றன்
ஓம்பினை அனைத்தும், அனைத்து நினை ஓம்பின்
செல்வத்துக் களித்தனை, தரித்திரத்து அழுங்கினை
சுவர்க்கத்து இருந்தனை, நரகில் கிடந்தனை 4

இன்பமும் துன்பமும் இருநிலத்து அருந்தினை
ஒன்றொன்று ஒழியாது உற்றனை அன்றியும்,
புற்புதக் குரம்பைத் துச்சில் ஒதுக்கிடம்
என்னநின் றியங்கும் இருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாகக் கருதினை இதனுள் 5



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீளையும் நீரும் புறப்படும் ஒருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படும் ஒரு பொறி
சளியும் நீரும் தவழும் ஒருபொறி
உமிழ்நீர் கோழை ஒழுகும் ஒருபொறி
வளியும் மலமும் வழங்கும் ஒருவழி 6

சலமும் சீயும் சரியும் ஒருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறும்
சட்டகம் முடிவில் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை உள்ளூறத் தேர்ந்து,
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை. 7

ஒழிவருஞ் சிவபெரும் போகஇன் பத்தை,
நிலுலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனதற நினைவற இருவினை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபரம் அற ஒரு 8

முதல்வனைத் தில்லையுள் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை ஆனந்தக் கூத்தனை
நெருப்பினில் அரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத்து ஒளிருஞ் சீவனை,
நினைமின் மனனே ! நினைமின் மனனே ! 9

சிவபெரு மானைச் செம் பொனம்பலவனை
நினைமின் மனனே ! நினைமின் மனனே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோயில் திரு அகவல் - 2

காதள வோடிய கலகப் பாதகக்
கண்ணியர் மருங்கில் புண்ணுடன் ஆடும்
காதலும் கருத்தும் அல்லால்நின் இருதாள்
பங்கயம் சூடப் பாக்கியம் செய்யாச்
சங்கடம் கூர்ந்த தமியேன் பாங்கிருந்து 10

அங்கோடு இங்கோடு அலமருங் கள்வர்
ஐவர் கலகமிட்டு அலைக்குங் கானகம்
சலமலப் பேழை இருவினைப் பெட்டகம்
வாதபித்தம் கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்தோல் உதிரக் கட்டளை 11

நாற்றப் பாண்டம் நான் முழத்து ஒன்பது
பீற்றல் துண்டம் பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்
ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம் ஓடும் மரக்கலம் 12

மாயா விகாரம் மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி தூற்றும் பத்தம்
காற்றில் பறக்கும் கானப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை 13

ஈமக் கனலில் இடுசில விருந்து
காமக் கனலில் கருகும் சருகு
கிருமி கிண்டுங் கிழங்கஞ் சருமி,
பவக்கொழுந்து ஏறுங் கவைக் கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவில் 14

பிணமாய்க் கிடக்கும் பிண்டம் பிணமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊறில் கிடக்க வொட்டா உபாதி
கால் எதிர் குவித்தபூளை் காலைக்
கதிர் எதிர்ப்பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத்து இயங்கும் இந்திர சாபம் 15

அதிரும் மேகத்து உருவின் அருநிழல்
நீரில் குமிழி நீர்மேல் எழுத்து
கண்துயில் கனவில் கண்ட காட்சி
அதனினும் அமையும் பிரானே! அமையும்
இமைய வல்லி வாழிஎன் றேத்த 16

ஆனந்தத் தாண்டவம் காட்டி
ஆண்டுகொண்டருள்கை நின் அருளினுக்கு அழகே!

**கோயில் திரு அகவல் – 3**

பால்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற்று அடக்கிய சிவனே அடைக்கலம்!
அடங்கலும் அடக்கிடும் கடுங்கொலைக் காலனைக்
கால்எடுத் தடக்கிய கடவுள் நின் அடைக்கலம்
உலகு அடங் கலும்படைத்து உடையவன் தலைபறித்து 17

இடக்கையில் அடக்கிய இறைவ! நின் அடைக்கலம்!
செய்யபொன் னம்பலச் செல்வ! நின் அடைக்கலம்
ஐய! நின் அடைக்கலம் அடியன் நின் அடைக்கலம்
மனவழி அலைத்திடும் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொருள் அறியா வழுக்குமறு மனனும் 18

ஆணவ மலத்துதித்து அளைந்ததில் உளைந்திடும்
நினைவைப் புழுவென நெளிந்திடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்,
தவறும் அழுக்காறும் இவறுபொச் சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சின 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இகலும், கொலையும், இழிப்புறு புன்மையும்,
பகையும், அச்சமும், துணிவும், பனிப்பும்,
முக்குண மடமையும், ஐம்பொறி முயக்கமும்,
இடும்பையும் பிணியும் இடுக்கிய ஆக்கையைய்
உயிர் எனுங் குருகுவிட்டு ஓடும் குரம்பையை 20

எலும்பொடு நரம்புகொண்டு இடையில் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்தும் ஒழுக்கு விழுங் குடிலைச்
செழும்பெழு உதிரச் சிறுபுழுக் குரம்பையை,
மலவுடல் குடத்தைப் பலவுடல் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக் 21

கொலை படைக் கலம்பல கிடைக்கும் கூட்டைச்
சலிப்புறு வினைப் பலசரக்குக் குப்பையைக்
கோள்சரக்கு ஒழுகும் பீற்றல் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை,
ஐம்புலப் பறவை அடையும்பஞ் சரத்தை. 22

புலராக் கவலை விளைமரப் பொதும்பை,
ஆசைக் கயிற்றில் ஆடும்பம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை,
மக்கள் வினையின் மயக்குந் திகிரியைக்,
கடுவெளி உருட்டிய சகடக் காலைப் 23
பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத்து அலைப்பக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடும் இயங்குபுற் கலனைக்
நடுவன்வந் தழைத்திட நடுங்கும் யாக்கையைப் 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக்கு அபயம்நின் அடைக்கலம்
வெளியிடை உரும்இடி இடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுள்நின் அடைக்கலம்
இமையா நாட்டத்து இறையே! அடைக்கலம் 25

அடியார்க்கு எளியாய்! அடைக்கலம் அடைக்கலம்
மறையவர் தில்லை மன்றுள்நின் றாடிக்
கருணை மொண்டு அலையெறி கடலே! அடைக்கலம்,
தேவரும் முனிவரும் சென்றுநின் றேத்தப்
பாசிழைக் கொடியொடு பரிந்து அருள் புரியும் 26

எம்பெரு மானின் இணையடிக்கு அபயம்
அம்பலத் தரசே அடைக்கலம் உனக்கே!

**கச்சித் திரு அகவல்**

திருமால் பயந்த திசைமுகன் அமைத்து
வரும் ஏழ் பிறவியும் மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலர் அடி இறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகாது அவமே
மாதரை மகிழ்ந்து காதல் கொண்டாடும் 27

மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்
முள்ளும் கல்லும் முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென உரைத்தும்,
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால் 28



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துள்ளும் வரால் எனச் சொல்லித் துதித்தும்,
தசையும் எலும்புந் தக்கபுன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென இயம்பியும்
நெடும் உடல் தாங்கி நின்றிடும் இடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும், 29

மலமும் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை ஆலிலை யென்றும்,
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந்து ஏறி
உகிரால் கீறல் உலர்ந்து உள் உருகி 30

நகுவார்க்கு இடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்,
குலையும் காமக் குருடர்க்கு உரைப்பேன்
நீட்டவும் முடக்கவும் நெடும் பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவும் உதவி இங் கியற்றும் 31

அலங்கையைப் பார்த்துக் காந்தள் என்றுரைத்தும்,
வேர்வையும் அழுக்கும் மேவிய கழுத்தைப்
பாரினில் இனிய கமுகெனப் பகர்ந்தும்,
வெப்பும் ஊத்தையும் மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மலர் என்றும் 32

அன்ன முங் கறியும் அசைவிட்டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீரும் சளியும் நின்று நின்று ஒழுகும்
கூறிய மூக்கைக் குமிழ் எனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிராது ஒழுகும் 33

கண்ணைப் பார்த்துக் கழுநீர் என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளூங் குறும்பி ஒழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளம் என வாழ்த்தியும்
கையும் எண்ணெயும் கலவாது ஒழியில்
வெய்ய அதரும் பேனும் விளையத் 34

தக்க தலை யோட்டில் முளைத்து எழுந்த
சிக்கின் மயிரைத் திரள் முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லும் நரக வாயில்
தோலும் இறைச்சியும் துதைந்து சீப்பாயும் 35

காமப் பாழி கருவிளை கழனி
தூமைக் கடவழி தொளைபெறு வாயில்
எண்சாண் உடம்பும் இழியும் பெருவழி!
மண்பால் காமம் கழிக்கும் மறைவிடம்
நச்சிக் காமுக நாய்தான் என்றும் 36

இச்சித் திருக்கும் இடைகழி வாயில்
திங்கள் சடையோன் திருவருள் இல்லார்
தங்கித் திரியும் சவலைப் பெருவழி
புண் இது என்று புடவையை மூடி
உள் நீர் பாயும் ஓசைச் செழும்புண் 37
மால்கொண்டு அறியா மாந்தர் புகும்வழி
நோய் கொண்டு ஒழியார் நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணும் ஆணும் பிறக்கும் பெருவழி 38

மலம் சொரிந்து இழியும் வாயிற்கு அருகே
சலம்சொரிந்து இழியும் தண்ணீர் வாயில்
இத்தை நீங்கள் இனிது என வேண்டர்
பச்சிலை இடினும் பத்தர்க்கு இரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்டர் அண்டமும் அனைத்துள புவனமும்
கண்ட அண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை இணையடி இறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுதல் ஒழிந்தே! 40

திருவேகம்பமாலை

அறந்தான் இயற்றும் அவனிலுங்கோடி அதிகமில்லம்
துறந்தான் அவனிற் சதகோடிஉள்ளத் துறவுடையோன்
மறந்தான் அறக்கற் றறிவோடிருந்திரு வாதனையற்று
இருந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியேகம்பனே. 41

கட்டிஅணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்திவிட்டால்
கொட்டிமுழக்கி அழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டியடி வைப்பரோ இறைவாகச்சி யேகம்பனே. 42

கைப்பிடிநாயகன் தூங்கையிலேயவன் கையையெடுத்து
அப்புறந்தன்னில் அசையாமல் முன் வைத்தயல் வளவில்
ஒப்புடன் சென்று துயிலீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படி நானம்புவேன் இறைவாகச்சி யேகம்பனே. 43

நன்னாரிற்பூட்டிய சூத்திரப்பாவைநன் னார்தப்பினால்
தன்னாலுமாடிச் சலித்திடுமோஅந்தத் தன்மையைப்போல்
உன்னா லியானுந் திரிவதல்லான் மற்றுனைப்பிரிந்தால்
என்னா லிங்காவதுண்டோ இறைவாகச்சி யேகம்பனே 44

நல்லறிணக்கமும் நின்பூசை நேசமும் ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ அகமும் பொருளும்
இல்லாளுஞ் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவாகச்சி யேகம்பனே. 45



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா தவனெறி நில்லா தவனைப் புலன்கடமை
வெல்லா தவன்கல்வி கல்லாதவன் மெய் யடியவர்பால்
செல்லா தவனுண்மை சொல்லா தவனின் திருவடிக்கன்பு
இல்லாதவன் மண்ணில் ஏன் பிறந்தேன்கச்சி ஏகம்பனே. 46

பிறக்கும்பொழுது கொடுபோவதில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்
குறிக்கும்இச் செல்வம் சிவன்தந்த தென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக்கென் சொல்லுவேன்கச்சி ஏகம்பனே. 47

அன்னவிசாரம் அதுவே விசாரம்அது வொழிந்தாற்
சொன்னவிசாரந் தொலையா விசாரநற் றோகையரைப்
பன்னவிசாரம் பலகால்விசார மிப்பாவி நெஞ்சுக்கு
என்னவிசாரம் வைத்தாய் இறைவாகச்சி ஏகம்பனே. 48

கல்லாப்பிழையுங் கருதாப்பிழையுங் கசிந்துருகி
நல்லாப்பிழையும் நினையாப்பிழையும் நின்அஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந் துதியாப்பிழையுந் தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி ஏகம்பனே. 49

மாயநட்போரையும் மாயமலமெனும் மாதரையும்
வீயவிட்டோட்டி வெளியேபுறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்று பின்தாதையைக் கூடிப்பின்தாயைமறந்து
ஏயுமதேநிட்டை என்றான் எழிற்கச்சி ஏகம்பனே. 50



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பொற் சுண்ணம்

ஆனந்த மனோலயம்

(தில்லையில் அருளியது - அறுசீர் ஆசிரிய விருத்தம்)

முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 8

திருப்பொற் சுண்ணம் /உரை 1-8

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறநிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 16

திருப்பொற் சுண்ணம் / உரை 9-16

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 24

திருப்பொற் சுண்ணம்/ உரை 17-24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறித்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 32
**திருப்பொற் சுண்ணம்/உரை 25-32**

அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்கணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 40
**திருப்பொற் சுண்ணம்/ உரை 33-40**

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடிந்துநாமே. 48
**திருப்பொற் சுண்ணம் / உரை 41-48**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 56

**திருப்பொற் சுண்ணம் / உரை 49-56**

வாள்த்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 64

**திருப்பொற் சுண்ணம் / உரை 57-64**

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 72

**திருப்பொற் சுண்ணம்/ உரை 65-72**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 80
**திருப்பொற் சுண்ணம்/ உரை 73-80**

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
காடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 88
**திருப்பொற் சுண்ணம்/ உரை 81-88**

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்
போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 96
**திருப்பொற் சுண்ணம்/ உரை 89-96**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையனெம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே. 104
**திருப்பொற் சுண்ணம்/உரை 97-104**

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்துநாமே. 112
**திருப்பொற் சுண்ணம்/உரை 105-112**

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 120
**திருப்பொற் சுண்ணம்/ உரை 113-120**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவகை நாமும் வந்தன்பர்தம்மோ
டாட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்துநாமே. 128
**திருப்பொற் சுண்ணம்/ உரை 121-128**

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே. 136
**திருப்பொற் சுண்ணம்/ உரை 129-136**

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடிக்
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே. 144
**திருப்பொற் சுண்ணம்/உரை 137-144**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்துநாமே. 152
**திருப்பொற் சுண்ணம்/உரை 145-152**

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 160
**திருப்பொற் சுண்ணம்/ உரை 153-160**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதார கௌரி விரத காப்பு

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடியமகிஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம் யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணீயல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொளிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாக் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குத் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்குத் திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணபொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு ந்ல்லதெல்லாம் பெருகிவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 தியானங்கள்

## தியானம் -01 தூய உடலினன் நான்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

எல்லையே இல்லாத பேராற்றலே! இணையே இல்லாத மகா சக்தியே! நின் இருப்பிடமான ஒரு சிறுகுடிசையே என் உள்ளமாவதைக் காண்கின்றேன். நீ கருணையாலே தந்தது இந்த என் உடல் என்பதையும் எண்ணுகின்றேன்!

என் உயிரானது , இந்தப் புதுவீட்டிலே, நலமாக வாழ்ந்து, விதிப்படியான செயல்களை எல்லாம் விரையச் செய்து முடித்து , உயர்நிலையினைப் பெறவேண்டும்! அதற்கு உதவும் கருவியாகவே இந்த என் மனித சரீரத்தை பரம கருணையோடு அளித்திருக்கின்றாய்!

ஆகவே, மகா சக்தியான நின் அருட்கொடையான இந்த என் உடல் என்னும் நின் சிறிய வீட்டினை, எப்போதுமே நல்ல படியாகவும், அழகோடும், வலிமையோடும் கருத்துடன் பேணிக்காப்பதை, என் முதல் கடமையாகவே நினைக்கின்றேன்.

இந்த என் உடலாகிய நீ வந்துலவும் சிறுவீட்டை நன்றாகவும், முறையாகவும் பேணுவதற்கு வேண்டிய எல்லாச் சக்திகளையும், முறைகளையும், பயிற்சிகளையும் நாள்தோறும் நான் மேற்கொள்கிறேன்.

அதற்கான முயற்சி வேகத்தையும் அறிவு நலத்தையும் நீயே எனக்குத் தந்திருக்கின்றாய்.

இந்த உடலுக்குக் கேடாகும் பழக்கமோ, நுகர்ச்சியோ, அது எதுவானாலும், அதனை நான் கொஞ்சமும் விரும்பேன். நலமாவன மட்டுமே நாடுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனை வளப்படுத்தும், தூய்மையாகப் பேணி வளமோடு வைத்திருக்கும் நுகர்ச்சிகளை மட்டுமே, இனி நான் தினமும் விரும்பி நாடுவேன்.

மகா சக்தியான நீயே நிலையாக வந்து குடியேறியுள்ள ஆலயம்தான் என் உடல் என்பதை எப்போதுமே மறவேன்! இந்த நினைவு, என்னிடம் எந்நேரமுமே இனிமேல் நிலைத்திருக்கும்! இந்த நினைவோடேயே, இதற்குத் தகுதியான தூய நிலையிலேயே என் உடலை எப்போதும் நான் சுத்தமாகப் பேணி வலிமையோடும் எழிலோடும் வைத்திருப்பேன்.

அதற்கேற்ற நல்ல அறிவையும், மனத்தெளிவையும் மன உறுதியையும், சக்தித்தாயே! எனக்குத் தந்து வருவாயாக! "உடம்பார் வலுக்கின் உயிரார் வலுப்பர்" என்ற மகா மந்திரத்தையும் நான் மறக்க மாட்டேன் தாயே!

ஆசைகளை அடக்கி, அவலம் மிகுக்கும் போக்குகளை ஒழித்து, உடலை நீயுறையும் கோயிலென்று எண்ணிப்போற்றும் உறுதியைத் தருவாய் தாயே!

## தியானம் -02 நன்மையே நாடல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

மகாமாயையே! மனத்திலே சதா நிரம்பி நிறைகின்ற மனோன்மணி நீயே ஆகிவிட்டாய் அந்த மணி ஒலிக்கின்றது. ஒளிர்கின்றது, உள்ளமெல்லாம் உவகைக் கடலாக, ஓவென்ற இரைச்சலிட்ட சதா சர்வமும் முழங்குகின்றது.

என் மனத்தகத்தே நிலையாகவே நீயும் வீற்றிருக்கத்தொடங்கி விட்டாய். நான் இப்போது என்றுமில்லாத ஓர் நிம்மதியை, ஆனந்த சுகத்தை, அருள்பெருக்கத்தை அனுபவிக்கின்றேன்.

என் கண்கள், இப்போது நல்லவைகளையும், எனக்கும் பிறருக்கும் பயன்தரக்கூடியவைகளையும் மட்டுமே நான் காணும் படியாக எனக்குக் காட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் காதுகள், இப்போது நல்ல செய்திகளையும், எனக்கும் உலகுக்கும் நன்மைதரும் நலமான கருத்துக்களையும் மட்டுமே நயந்து கேட்கின்றன!

என் மூக்கு, இப்போது எனக்கு மெய்யாகவே இன்பம் தருகின்ற, சுகந்தமான நறுமணத்தையும், தூய காற்றாகிய பிராணனையும் மட்டுமே உட்கொண்டு என்னைக் களிப்பூட்டுகின்றது! எனக்கு வலுவூட்டுகின்றது.

என் வாய் இப்போது, இனிமையான, அருள்கனிந்த, நலம்பயக்கும் சொற்களை மட்டுமே பேசுகின்றது. அன்போடு கலந்து தோய்ந்துவரும் மென்மையான இனிய மகா சத்தியத்தை மட்டுமே சாற்றுகின்றது!

என் உடலும், இப்போது தனக்கு மெய்யாகவே எழிலும், நலமும் தரும் தொடர்புகளில் மட்டுமே நாட்டமும், சுகமும், நலமும் நாடிக் காண்கின்றது.

நன்மையற்றதும், பகட்டாகத் தோன்றி என் மன நலத்தையும், உடல் நலத்தையும் சிதைப்பனவும் ஆகிய எதையுமே , என் ஐந்து பொறிகளும், இப்போது அடியோடு நாடுவதில்லை. அழுக்ககன்ற இந்த என் நிலையினாலே, என்னுடைய ஆசைகளும் என் உள்ளத்தின் கட்டுக்கு அடங்கியே எழுகின்றன. அவற்றாலே நான் ஆனந்தமும் இன்பமுமே காண்கின்றேன். என்னுடைய நம்பிக்கைக்கு உகந்த பணியாளர்களைப் போலே, எனக்கு, எப்போதும் நன்மைகளையே இப்போது என் உடலுறுப்புகள் எல்லாமே செய்து வருகின்றன!

நன்மையை நாடநாட நன்மையையே காண்கின்றேன்! புன்மை அகன்று போனதையும் பார்க்கின்றேன்!

**எல்லாம் நலமே தரும் நின் பெருங்கருணை, தாயே!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் -03 நல்லதையே கேட்டல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

நாதமே வடிவானவள் நீ ! சித்திரச் சிலம்பொலியோடே ஓயா நடனமிடும் உமையவள் நீ ! நீ என் உள்ளத்திலேயே, இப்போதெல்லாம், எப்போதும் தோன்றி ஆனந்த நடனம் செய்கின்றாய்.

இப்போது, என் காதுகள், இனிதான தெய்வீக ஒலியை மட்டுமே விரும்பிக் கேட்கின்றன. நலம் பயப்பவையும், அன்பின் எதிரொலிப்பாய் எழுபவையுமான நல்ல பேச்சுக்களை மட்டுமே, நயந்து நாடிக் கேட்கின்றன! பிறவற்றைக் கேளாமலேயே, என்னை நல்ல நெறியிலே நிறுத்தி வைக்கவும், அவை இப்போது எனக்கு உதவியாயிருக்கின்றன.

காதுகளின் கேட்கும் சக்தியும், இப்போது மிகவும் கூர்மையானதாகி வருகின்றது. குறிப்பிட்ட சிறு தொலைவிலிருந்து வரும் ஒலிகளை மட்டுமே கேட்கப் பழகிய என் காதுகள், இப்போது தொலைதூரங்களையும் கடந்து, அங்கே எழுகின்ற ஒலிகளையும் இங்கிருந்தே உற்றுக் கேட்கக்கூடிய மகா சக்தியோடும், ஆற்றலோடும் விளங்குகின்றன.

கேட்பவைகளில் பெரும்பகுதிகளையும், அவ்வப்போதே மறந்துவிடும் என் மனமும், இப்போது மிகமிகக் கூர்மைபெற்று, உன்னிப்பாக,கேட்கும் எதையுமே மனத்தில் தெளிவாகவே பதிவு செய்துபேணிக் காக்கவும் பெருகிய ஆற்றலோடு விளங்குகின்றன.

விரும்பியபோது, கேட்டதைக் கேட்டபடியே மீண்டும் சொல்லும், அரியதொரு நினைவாற்றலையும் நான் இப்போது மிக நுட்பமாகவே பெற்றிருக்கின்றேன். கேட்டது எனக்கு இனி மறக்காது. ஒருபோதும் மறக்கவே மறக்காது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்ற உயிர்களின் குரல்களிலே இழையோடி வரும் பல்வேறு வகையான உணர்வுகளையும் நான் இப்போது புரிந்து கொள்ளுகின்றேன். அவற்றை அறிந்து அவற்றுக்கும் உதவி செய்ய முந்துகின்றேன். எங்கிருந்து எவர், என்னைப்பற்றி, எப்படிப் பேசினாலும், என் காதுகள் அவற்றை அப்படியே கேட்டறியும். அபூர்வமான கேள்வி வல்லமையையும் பெற்று விளங்குகின்றன.

சர்வ சராசரத்தையும் ஊடுருவி இயக்கும் மகா சப்தம் எனப்படும் சக்தி மூச்சையும் என் காதுகள் சதா கேட்கின்றன. எல்லாம் நின் கருணை தாயே!

## தியானம் -04 அளவிலா அறிவு பெறுதல்!

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

ஞானாம்பிகையே! சுத்த சிவஞானமே வடிவாகிய அன்னையே! ஆதிசக்தியே! எப்போதும், என் மனத்திலேயே நீ கோயில் கொண்டிருக்கிறாய். இதனாலே, என்னைக் கவிந்திருந்த மூடத்தனமான, அறியாமை என்னும் இருள் படலங்கள் என்னைவிட்டு முற்றிலுமே அகன்று போய்விட்டன! சர்வ ஞானமும் , இப்போது என்னுள்ளே தாமாகவே மலர்ந்து வருகின்றன. நான் சுத்த ஞானமயமாகவே இப்போது விளங்குகின்றேன். பூர்வீக ஞானிகளின் அளவற்ற சிந்னைகளும், அறிவார்ந்த வாக்குகளும், இப்போது என் உள்ளத்திலேயே அலையலையாகத் தாமாகவே எழுந்து வருகின்றன.

நான் கற்கும் கல்வியின் வளமெல்லாம் என்னுள்ளே ஆழப்பதிந்து, வேரிட்டுக் கிளைத்துச் செழித்து வளர்கின்றன. அவை, எப்போதும், என்னை நல்லறிவே நிறைந்த ஒருவனாகவும் உயர்த்துகின்றன.

என் உள்ளத்திலே உதிக்கின்ற நினைவுகள், நான் உணரும் உணர்வுகள், நான் பேசும் பேச்சுக்கள் , நான் எழுதும் எழுத்துக்கள், நான் பாடும் பாடல்கள், எல்லாமே சுத்த மெய்ஞ்ஞானத்தின் சுடர்மணிகளாகவே நான்கு திசையும் படர்ந்து ஒலி பரப்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கமோ, அறியாமையோ, மாறிப் புரியும் மறுதலை உணர்வோ, என்னிடத்தே இப்போது தோன்றுவதே இல்லை. செறிவான, சுத்த மெய்ஞ்ஞானமே பொங்கித் ததும்புகின்றது.

இந்த பரஞானம், உன்னையும் ஞான நிலையிலே இணைந்து பரமஞானத்தோடு கொண்டு சேர்த்து உயர்த்துவதை, நான் தெளிவாகவே உணர்கின்றேன். தெளிவும், உறுதியும், இனிமையும், அழகும், வளமும், என் சொற்களில் இப்போதெல்லாம் இழைத்து கனிந்து எழுந்து வருகின்றன.

என் பேச்சைப் பலரும் விரும்பிக் கேட்கத் துடிக்கின்றனர். கேட்டு நடக்கவும் முயல்கின்றனர்.

கோடிகோடியான மக்கள் என் எழுத்தை ஆர்வத்தோடே மனம் கலந்து விரும்பிப் படிக்கின்றனர்.

அறிவின் நிழலிலிருக்க, அறிவு செழித்து, யுகஞானத்தோடு சேர்த்து, என்னை உயர்த்துவதையும் உணர்கின்றேன்!

நான் ஞானச்செல்வனாகவே இருக்கின்றேன். எல்லாம் ஞானமே வடிவான நின்னை என் உள்ளத்திலே கொண்டு இருப்பதனாலேதான், தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் -5 தாயைப் போற்றல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

அருளே திருவடிவான அம்பிகையே! நீயே என் உள்ளத்திலே இப்போது நின்று கோலோச்சுகின்றாய், அதனாலே தெளிந்த அருள்மயமான அறிவே இப்போது என்னிடம் நிரம்பி இருக்கின்றது. சிறுமையுணர்வுகளும், செருக்கமான நினைவுகளும், தீய சிந்தைகளும், என்னை விட்டு அறவே அகன்று போய்விட்டன.

என்னைச் சுமந்து பெற்று வளர்த்த தாயையும் நின் அருள்வடிவாகவே கண்டு போற்றுகின்றேன்.

நான் கருவில் உருவாகி வளர்ந்து, சிறு மகவாகப் பிறந்த நாளுக்கு நான் வளர்ந்து வந்த அந்தக் குழந்தைக் காலத்திலே, என்னைக் கண்ணும் கருத்துமாகப் பாசத்தோடே பேணிக் காத்து வந்த என் தாயின், எல்லையில்லாததும், உவமிக்கவே முடியாததுமான அந்தப்பெரும் கருணைப் பிரவாகத்தை நெஞ்சார நினைக்கின்றேன். நினைக்க நினைக்க என் உள்ளத்திலே தாய்மையின் எல்லைகடந்த கனிவான உணர்வே நிறைகின்றதையும் உணர்கின்றேன்.

என் உடலிலுள்ள ஒவ்வோர் அணுவும், என் அருமைத் தாயின் உடலிலிருந்தே தனக்காக மூல சக்தியைப் பெற்றுப் பிறந்து, வளர்ந்து செழித்துச் செயலாற்றுகின்றன. இந்த அறிவியல் காட்டும் அரிய உண்மையிலே நான் என்னையே மறக்கின்றேன். என் அணு ஒவ்வொன்றிலும் தாயின் அருளைக் கண்டு தலைவணங்குகின்றேன். தன்னையே உருகச்செய்து தன்னிடத்தே என்னை உருவாக்கிய அந்தத் தாய்மையினைப் போற்றுகின்றேன்! சக்தித் தாயான நின் எல்லையற்ற தாய்மையுணர்வின் ஒரு சிறுபகுதியே இது எனவும் நினைக்கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாயின் மகிழ்ச்சிக்காக, எதனையும் உவப்போடே செய்யும் மன உத்வேகம் இப்போது என்னை ஆட்கொள்ளுகின்றது. உண்பித்தும், உடுப்பித்தும் , என்னைப்பேணி, தான் உவகைக் கடலிலே ஆழ்ந்திருந்த அந்த உத்தமத் தியாக வடிவை, மாபெரும் தெய்வமாகவே போற்றுகின்றேன். மகா சக்தி மாதாவான நீயாகவே மதிக்கின்றேன்.!

அவள் தளரும்போதில் அவளைத் தாங்கவும், அவள் என்னைப் பெற்றதனாலே பெருமையும் ஆனந்தமும் பெற்றுத் திளைக்கவும், என்னால் இயன்றவை அனைத்துயும் இதயத்தோடேயே செய்வேன். எந்தச் சிக்கலும் மயக்கமும், என்னுடைய இந்தத் தாயபைப் போற்றும் பண்பைச் சிறிதும் மாற்றிவிடாமல், எப்போதும் நன்றி மறவாது தாயை மறவாது விழிப்பாயிருப்பேன்!

அதற்கு வேண்டிய சக்தியைத் தந்தருள்வாய், தாயே!

## தியானம் -6 தந்தையைப் போற்றல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

அனைத்தாகவும் மலர்ந்து, அந்த அனைத்தையும் முறையோடு வாழுமாறு அருளோடும் காத்து நடத்திவருகின்ற அளவிலாக் கருணையின் வடிவமே இப்போது என்னிலேயும், தோன்றாத் துணையாக அமைந்து, என்னையும் இயக்கி நடத்தி வருகின்ற மகா சக்தியே!

அளவற்ற கருணையின் பரந்த விரிவே! என்னை வளர்த்து ஆளாக்கி, எனக்குக் கல்வியும் ஒழுக்கமும் பிறபிற பயிற்சிகளும் தானே தந்தும், பிறரால் தரச்செய்தும், என்னைச் சிறந்த நிலைக்குச் செம்மைப்படுத்துவதிலேயே கவனம் செலுத்திய என் தந்தையின் வடிவாகவும், என் உள்ளத்திலே இப்போது நிரம்பி நிற்கின்றவளே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைவிடச் சிறந்தோனாக நான் வரவேண்டும் என்று என்னை உருவாக்கிக் காண்பதிலேயே எப்போதும் மிகப்பாடுபட்டு, அந்த நிலையை நோக்கி நான் வளர்வதிலேயே தான் மகிழ்ந்து, அதற்காவன எல்லாம் பொறுப்புணர்வோடே செய்வதிலேயே தான் உவப்படைந்த அந்தப் பேருள்ளக் கசிவை, தந்தையின் வடிவை மனமாறப் போற்றி நினைக்கின்றேன்!

என் வாழ்வின் எல்லா நிலைகளிலும், நான் செய்கின்ற எல்லாச் செயல்களிலும், என் உயர்வுகளின் ஒவ்வொரு படியிலும், என்னை உருவாக்கிய அந்தத் தந்தையின் அயராத முயற்சியைக் கண்டு, அன்பின் பெருக்கை நினைந்து, நன்றியோடு போற்றிப் பூரிப்படைகின்றேன்.

அந்தத் தந்தையுமான தெய்வம், என் உயர்ந்த வாழ்வையும், வளத்தையுமே நினைந்து, தன்னைத் தேய்த்து உதவிய அன்புத்தெய்வம்! அது தளர்கின்ற போதிலே தாங்கிப் பேணுவதிலே நான் ஆனந்தப் பரவசத்தைக் காண்பேன். அதன் நோக்கங்களைச் செயல்படுத்துவதே என் கடமையாகக் கொள்வேன். என் இதயக் கோயிலிலே தாயும் தந்தையும் சக்தியும் சிவமுமாகவே இப்போது நிலைத்திருக்கக் காண்பேன். 'தந்தை தாய்ப் பேண்' என்னும் சத்திய வாக்கை மறவேன்! இதற்கு வேண்டிய வலிமையைத் தந்தருள்வாயாக, தாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் -7 ஒழுக்கத்திலே நிலைத்தல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

சான்றோர்களும், பெரியோர்களும், முன்னோர்களும் வாழ்ந்து காட்டிய நல்லொழுக்க மரபுகளை உறுதியோடும் நம்பிக்கையோடும் நான் பேணிக் காத்து வருகின்றேன்.

இதனால், என் மனத்தில் தோன்றும் ஆசாபாசங்கள் தேய்ந்து கரைந்து குறைகின்றன. என் இன்றியமையாத தேவைகளை மட்டுமே என் மனம் இப்போதெல்லாம் நினைக்கின்றது. அதற்கேற்பவே, என் சிந்தனைகளையும், நான் நடத்துகின்றேன், செயல்களையும் செய்கின்றேன்!

என்னைப்போலவே , பிறருக்கும் அவசியமான தேவைகளும், ஆசாபாசங்களும் இருக்கின்றன என்பதனையும் உணர்கின்றேன். அவற்றை நியாயமானவை என்றே நான் மதிக்கின்றேன். ஆகவே என் சொல், செயல் ஆகியவற்றால் பிறர்மனம் எப்போதும் மகிழ்ச்சி காணுமாறு மட்டுமே நான் நடந்து வருகின்றேன்.

என் உரிமைகளையும், கடமைகளையும் நான் மதிப்பது போலவே, பிறருடைய உரிமைகளையும், கடமைகளையும் நான் மதிக்கின்றேன். என் கடமைகளைச் செய்வதிலே நான் எப்போதும் கவனமாக இருக்கின்றேன். பிறர், தம் கடமைகளைக் கவனமாகவும் முறையாகவும் செய்வதையும் நான் பாராட்டுகின்றேன் வரவேற்கின்றேன்!

நல்லவை மட்டுமே, என்னிலிருந்து இப்போது துளிர்க்கின்றன. இறையருள் வடிவான சான்றோரின் ஆணைகள், என் உள்ளத்தினுள்ளே, தாமே எழுந்து மலர்ந்து என்னை வழி நடத்தி வருகின்றன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்ம்மை, தீச்சொல், புறங்கூறல் , களவு ஆணவம், பொறாமை, அச்சம் , வெறுப்பு போன்றவை எல்லாம் என்னை அண்டுவதில்லை. என்னைப் பாதிப்பதுமில்லை அவை என்னளவிலே இப்போது ஜீவனற்றவையாகப் போயின!

பிறரிடமும் இவற்றை இப்போதெல்லாம் என் கண்கள் பார்ப்பதேயில்லை! காதுகளும் கேட்பதேயில்லை.

எங்கும், எதிலும் நன்மைகளையும் , நல்லவற்றையுமே காண்கின்றேன். சமுதாயம் சிறப்பதற்கு ஒவ்வொருவரும் நல்லொழுக்க நெறியினைப் பேணி, நன்முறையிலே வாழ்வது மிக மிக அவசியம் என்பதையும் உறுதியாக நம்புகின்றேன்.

ஒழுக்கம் உயர்வு தருவது! ஆதலால் அதையே உயிரினும் மேலானதாகக் பேணிக் காத்து வாழ்ந்து வருகின்றேன், வாழ்ந்தும் வருவேன்!

ஒழுங்கான இயக்கத்தை உலகெங்குமே நடத்திவரும் மகாசக்தியான நின் நினைவே, என்னைப் புறங்போகாதபடி காத்துவருகின்றது! என்றும் காத்துவரும்!

## தியானம் -8 சினத்தைக் கைவிடல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

அன்பே வடிவமான, அருளே குணமான, மகா சக்தியான நின்னையே இப்போது என் உள்ளத்திலே நிலையாகக் கொண்டிருக்கின்றேன். அதனாலே எப்போதும் அன்பே சுரந்து சுரந்து என்பால் நிரம்புகின்றது. அந்த அன்பானது என்னைச் சுற்றிலும் எனக்குப் புறத்தேயும் பாய்ந்து பரவி நிறைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அன்பின் பெருக்கத்தால், என் மனத்திலே அளவற்ற அமைதியும், எல்லையற்ற ஆனந்தமும் இப்போதெல்லாம் நிறைகின்றன. எல்லா உயிரையும், கரைகடந்த அன்பினாலே கனிவோடு நேசிக்கின்ற இதயக்கசிவும், மனவிரிவும் அறிவுத்தெளிவும் என்னிடம் நிரம்பி நிற்கின்றன.

"பகை என்னும் மரத்தின் வித்தே கோபம்" என்று நான் தெளிவாக அறிகின்றேன். கோப வித்தை ஊன்றினால், பகை முளைத்து படர்ந்து கிளைத்து வெறி கொள்ளுகின்றது. கடுஞ்சொற்களும், தீச்சொற்களும் கட்டுமீறி எழுந்து கேட்பவரைச் சுடுகின்றன. உடலின் எல்லா இயக்கமும் ஒடுங்கிச் சினத்தின் ஆதிக்கமே செறிந்து விடுகின்றது. நெருப்பைவிட சினத்தின் வெம்மை பெருங்கொதிப்போடு சீறி எழுகின்றது. இதை அறிந்த நான் " சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" யைச், சிறிதும் என்பால் வேர் கொள்ளாமல், அடியோடே வெட்டி வீழ்த்தி விடுகின்றேன்!

"கோபமே மனிதனைச் சண்டாளத் தனத்திற்குக் கொண்டு சேர்ப்பது" என்பதையும் நான், கொஞ்சமும் மறக்கமாட்டேன். கோபத்தின் பிடியிலிருந்து , மகா சக்தியான நீ என்னை இப்போது விடுவித்து விட்டாய்.

ஆணவமும் , அதிகச் சினமும் அறிவைக்கொடுத்து நஞ்சைப் பரப்புவதனால் அவற்றையும் நீ அகற்றி விட்டாய். தன்னலமும் கரவும், பொறாமையும், பிறர் துயரத்திலே இன்புறும் குரூர மனோபாவமும் கோபக்காற்றோடு பறந்து வருகின்ற குப்பைகளே என்று, அவற்றையும் உறுதியாகவே அகற்றிவிட்டாய்.

கோபம் சாகச் சாகக் குணமே மலர்ந்து, உயிர்ப்போடு மேலோங்குவதையும் இப்போது உணர்கின்றேன்.

சூதும், வாதும், ஆசைகளும், அகங்காரமும் கோபத்தை விதைப்பதனால், அவற்றையுமே அறவே அகற்றி விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாசக்தியான நின்னையே மனத்திலே கொண்டுள்ள என்னிடம் கோபமே இனித்தோன்ற முடியாது, தோன்றவும் தோன்றாது, தாயே!

## தியானம் -9 குடும்பத்தில் கூடி வாழ்தல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

மக்கள் ஒன்றுகூடி , வாழ்வதற்கான பாதுகாப்போடு கூடிய அமைப்பேயே "குடும்பம்" எனவும் "குடித்தனம்" எனவும் பெரியோர்கள் அமைத்துள்ளார்கள். இதை நான் மறவாமல் நினைவிலிருத்திப் போற்றுகின்றேன்!

ஆகவே என்னுடைய குடும்பத்திலே நன்மை பெருகிச் செழிக்கவேண்டுமானால், ஒன்றுகூடி வாழ்வதனைச் சிதைத்து இடையறுக்கும் எண்ணமோ, செயலோ, என் வழியிலே குறுக்கிடக் கூடாது என்பதிலே, நான் மிகவும் விழிப்பாயிருக்கின்றேன்.

என் குடும்பத்திலேயுள்ள ஒவ்வொருவரும், என்னைப் போலவே தனித்தன்மை பெற்ற ஒவ்வொரு ஜீவர்கள் என்பதையும், அவர்கள் ஒவ்வொருவருக்கும் என்னைப் போலவே பலவிதமான ஆசைகளும், ஆர்வங்களும், குணபாவங்களும் விதித் தொடர்புகளும் இருக்கக்கூடும் என்பதையும் நான் உணர்கின்றேன்.

மகா சக்தியான அன்னையே! நின் விதிப்படி, அவர்கள், குடும்பம் என்ற அமைப்பிலே, என்னோடு சேர்ந்து ஒன்றுகூடி, இருக்கும்படியாக விதியால் ஒன்று சேர்க்கப்பட்டவர்கள் என்பதையும் நான் உணர்கின்றேன். ஆகவே, அவர்கள் அனைவருடனும் ஒன்றாகக் கலந்தும், அவர்கள் மீது அன்பும் பாசமும் பொழிந்தும் வாழ்வதே, என் பிறவிக் கடமை என்பதையும் உணர்கின்றேன்.

இவர்களை, அஃதாவது என் குடும்பத்தைச் சேர்த்தவர்களை என்னோடே, கலந்து வாழுமாறு ஒன்றுபடுத்தி வைத்த விதியான நீயே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் நல்வாழ்வுக்கு வேண்டிய எல்லாவற்றையும் எனக்குத்தந்து உதவுவாய் என்பதையும் நான் மனப்பூர்வமாகவே நம்புகின்றேன். அதற்காக முயற்சிக்கும் கடமைமட்டும் என்னது என்பதையும், அதுவே விதியின் நிர்ணயம் என்பதையும், நான் மிக மிக உறுதியாகவே இப்போது நினைவில் கொள்ளுகின்றேன்.

இந்த மன உறுதியானது என்னிடத்திலே வலுத்து விட்டதனாலே, இப்போது குடும்பத்தை எப்படி நடத்தப் போகின்றோம்? என்று நினைத்து நினைத்து, நான் இதுவரையிலும் பட்டுவந்த கவலைகள் என்னைவிட்டு முற்றவும் அகன்றுவிட்டன. குடும்பத்தைப் பாரமாகக் கருதியிருந்த அச்ச உணர்வு என்னைவிட்டு மறைந்தது. அதுவே மகா சக்தியின் நின் திருவருள் என்ற தெளிவு. இப்போது என்னிடம் நிலைத்துவிட்டது! எல்லாம் இனிதாக நீயே நடத்துவாய் என்ற அசையாத துணிவோடு, நம்பிக்கையோடு என் குடம்ப வாழ்வை இப்போது நடத்திவருகின்றேன். நீதான் என்னுள் நின்று இயக்கியும், நீயாகவும், என் குடும்பத்தை இனிதே காப்பாயாக தாயே!

## தியானம் -10 அம்மையும் அப்பனும்!

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

மனித சிந்தனைகளிலேயே மிகமிக உயர்ந்த சிந்தனையாகி சிவசக்தியராக ஒன்றுபட்ட உங்கள் ஏக உருவத்தை, அம்மையப்பரின் ஒன்றிணைந்த "மாதொரு பாக" வடிவத்தை நான் மனத்திலே இப்போது நிலையாகக் கொண்டு, சதா தொழுது போற்றி நினைக்கின்றேன்.

உலகத்திக்கு அம்மையப்பர்களான நீங்கள் பெருங் கருணையோடே ஒன்றிணைந்து நின்று, கருணை வெள்ளத்தைப் பொலிந்து காத்துவருகின்றது போலவே, குடும்பத் தலைவன் தலைவியர் ஆகிய கணவன் மனைவியராகிய நாங்கள் இருவரும், ஆணும் பெண்ணுமாகிய நாங்கள் இருவரும் , ஒன்றிணைந்த மனைத்தியராய்க் குடும்பநலனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேணிக் காத்துவரல் வேண்டும் என்பதையும் , நான் அழுத்தமாகவே இப்போது என் மனதில் பதித்துக்கொள்ளுகின்றேன்.

ஒன்றிணைந்த சிவசக்தியிலே, சர்வ சக்திகளும், சர்வ குணநலன்களும், சர்வ கபிட்சங்களும் நிரம்பி நின்று . அனைத்தையும் ஆனந்த மகா சாகரத்திலே திளைக்கச் செய்து வருவது போலவே, தலைவன் தலைவியர் என ஒன்றிணைந்த மனத்தினராய் நாங்கள் நடத்தும் குடும்பத்திலும் , சர்வ சுகபோக நலங்களும் பொங்கிப் பெருகிப் பரிமளிக்கும் என்பதை அறிந்து எங்கள் வாழ்விலும், இந்த நினைவையே போற்றுகின்றேன்.

தலைவனும், தலைவியும் சிவசக்தியரே போன்று ஒன்று கலந்து, ஒருவரேயான மனக்கருத்துடன், ஒருவரையொருவர் போற்றியும் அறிந்தும் ஒன்றுபட்டு வாழும் போதுதான், வாழும் அந்த வாழ்விலேதான் , இன்ப நாதம் இசைபரப்பும் என்பதையும் மறவாமல் உணர்த்திருக்கிறேன். மறவாமல் இதையே நடைமுறைப்படுத்துகிறேன்.

இதையே என் வாழ்வின் உன்னத இலட்சியமாகவும் போற்றுவேன். உயர்வு தாழ்வு என்னும் பேதமே எங்களுள் இனிமேல் இல்லை. ஆன் தலைவன், பெண் தலைவி! இருவரும் ஒத்த சம நிலையிலே, ஒத்த சம உரிமையோடு இறைவிதிப்படியே நடத்தும் வாழ்வு முயற்சிதான் குடும்ப வாழ்வு, இல்லற வாழ்வு! இதை எப்போதும் நான் மறக்கவே மாட்டேன்! அலட்சியப்படுத்தவும் எண்ணேன்! இந்த எண்ணம் எங்கள் நினைவைத் தெய்வீகமாக்குகிறது! உறவைப் புனிதமாக்குகின்றது! வாழ்வை வழமாக்குகின்றது! செயல்களை இனிப்பாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தியானம் -11 இலட்சியக் கனவுகள்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

எப்படி வாழப்போகிறோமெனவும், என்ன செய்யப்போகிறோமெனவும் வருங்காலம் பற்றிய திட்ட வட்டமான கனவுச் சிந்தனைகளிலே சதாசர்வமும் சிறப்பாக ஈடுபடுவது, எப்போதுமே எனக்கு முடிவில் நன்மையை விளைவிக்கும் என்று, நான் உறுதியாகவே, தெளிவாகவே நம்புகின்றேன்.

உயர்ந்த சிந்தனைக் கனவுகளோ, இந்த உலகத்திலே பல அரியபெரிய அற்புத விளைவுகளைப் பின்னர் உருவாக்கி இருக்கின்றன.

மனித சமுதாயத்திற்குப் பெருநன்மை செய்த அறிவாளர்கள் பலரும், இப்படிக் கனவு கண்டவர்களே!

நான் காணும் கனவுக் காட்சிகள் எல்லாம் நலம் பயப்பதாக மட்டுமே இருக்க வேண்டும் என்பதிலும், அதை அப்படியே நனவாக்க, அயராத விடாமுயற்சியும், தளர்ச்சி சற்றும்மே கொள்ள மாட்டேன் என்பதிலும் நான் உறுதியான மனத்துடனேயே விளங்குவேன்.

தம் வாழ்க்கையிலே வெற்றிபெற்றவர்கள் யாவரும், தம்முடைய ஆழ்ந்த மோனக் கற்பனையிலே, தம் நோக்கத்தை மிக மிக வலுவாக உருவேற்றி உறுதிப்படுத்திக் கொண்டவர்களே! பின்னர் அதை அடைந்தே தீருவோம் என்ற வலுவான நம்பிக்கையோ, தளராமல் முயன்று முன்னேறி வெற்றி பெற்றவர்களே! காலம் அவர்களது கனவுகளை நனவாக்கி வைத்தது. இது உண்மையே என்பதையும் நான் தெளிவாக உணர்கின்றேன். என் மனத்திலேயும் அத்தகைய வலுவான எண்ணங்களையே ஊன்றிவைத்து பேணிப்பரி பாலிக்கின்றேன்!

செயலாகச் செயல்படுத்தும்போது , என் கனவுகள் தெய்வீகக் காட்சிகளாகவே மதிக்கப்பெறும் உயர்ந்த நிலையையும் அடைந்துவிடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே, நான் உயர்ந்த வாழ்வு நலன்களையும், அறிவுச் செழுமைகளையும், மற்றும் சிறப்புக்களையும் பற்றி தெளிவான இலட்சியக் கற்பனைகளை, என்னுள்ளே எப்போதும் கண்டு கொண்டிருக்கின்றேன்.

என் ஒவ்வொரு நொடிப்பொழுதையும், அவற்றை நனவாக்குவதற்கே செலவிடுவதிலும், நான் மிகவும் விழிப்பாயிருக்கின்றேன்.

உயர்வு, வளமை, புகழ் இவையே என் உள்ளத்தின் மூன்று நித்திய ஜோதிகள். அவை என்றும் நின்று பிரகாசிக்க, நான் எப்போதும் அந்த ஒளியின் வழியிலேயே சென்று, முயன்று, வெற்றியும் காண்பேன்.

இவ்வகையிலே நீயும் உதவி செய்வாய் தாயே!

## தியானம் -12 வீட்டிலே நடப்பது

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

கநானே, எப்போதும் ஓயாது ஒழியாது, சதாகாலமும் ஏதாவது தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் ஆசையோடு, வாயாடிக் கொண்டிருக்க மாட்டேன்.

பிறர் பேசுபவைகளையும் ஆர்வத்தோடும் அக்கறையோடும் கூர்ந்து கேட்டு, எனக்குப்பயன்படுவனவற்றைச் சேகரித்துக் கொள்வதிலேயே, எப்போதும் கவனமாக இருப்பேன்.

என் பேச்சு, எப்போதும் சுருக்கமாகவும், தெளிவாகவும், இனிமையாகவும், பிறர் விரும்பும் வகையாகவும் விளங்குவதில், நான் அளவற்ற கவனத்தோடிருப்பேன்.

உணவைப் பாராட்டிச் சுவைத்து விருப்போடே உண்பதிலும் , வீட்டு நிர்வாகத்தின் ஒழுங்கையும் தூய்மையையும் போற்றிப் பாராட்டுவதிலும், எப்போதும் நான் தாராளமான , பாராட்டும் மனோபாவத்துடன் இருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் வாழ்க்கைத்துணையின் விவகாரங்களிலே எல்லாம் தலையிட்டு, தலைக்குனிவு உண்டாகும்படி எதுவும் செய்யவோ சொல்லவோ மாட்டேன். என் சுதச்திரத்தை மதிப்பது போலவே, பிறர் சுதந்திரத்தையும் நான் மதிப்பேன்.

அக்கம்பக்கத்தார் பற்றிய ஆதாரமற்ற குறைபாட்டுப் பழிப் பேச்சுக்களை, ஒருபோதும் நான் பரவச் செய்ய மாட்டேன். அது பொருந்தாத விஷயம் என்று கருதி அவற்றை வெறுத்து, அறவே ஒதுக்குவேன்.

பிறர் மத்தியில் , என் வாழ்க்கைத் துணையை எப்போதும் மதிப்போடு விளங்கும்படியாகவே நடத்துவேன். அளவுக்கு மீறிப், பிறர் தவறாக எடுத்துக்கொள்ளும் அளவுக்குப் பொய்யான புகழ்ப் பேச்சுக்களையோ, அளவுகடந்த மதிப்புரைகளையோ சொல்லவும் மாட்டேன். அளவோடு, ஆனால், மதிப்போடு நடப்பதையே மரபாகப் போற்றுவேன்.

துணையை, ஏதாவது ஒரு செய்தி குறித்துக் கண்டிக்கத் தான் வேண்டும் என்றாலும், அந்த நேரத்திலே கண்டித்துச் சொல்லி உணரச் செய்து, பின்னர், அதைப்பற்றி அப்படியே முழுவதும் மறந்துவிடுவேன். எப்பொதும்போல் அதன்பின் நலனமற்ற அன்பு காட்டியும் வருவேன்!

துனையின் குறைகளேயே பார்த்துத் தேடி நினைப்பதைக் காட்டிலும், நல்ல குணங்களையே தேர்ந்து பெரிதாக மதித்துப் பாராட்டுவதில், நான் நிலையானதொரு திருப்தியையும் காண்பேன்.

சிறு சிறு குறைகளைப் பாராட்டாமலேயே ஒதுக்கிவிட்டுப், பெரிய குறைகளை நயமாக எடுத்துக்காட்டித் திருத்தி, குணமே பெரிதாகப் போற்றி மகிழ்வேன், அவளையும் மகிழச் செய்வேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியை "வீட்டுவேலைக்காரி" என்று கணவன் நினைப்பதோ, கணவனை "வீட்டு வேலைக்காரன்" என்று மனைவி நினைப்பதோ, மிக மிகத் தவறானது என்பதையும் நான் ஒரு போதும் மறவேன்!

ஒருவரையொருவர் மதித்திருத்தல் ஒருவரோடொருவர் அன்பு பாராட்டுதல், ஒருவருக்கு ஒருவர் உதவுதல் என்பவையே என் குடும்பத்தினரின் நடைமுறை இயல்புகளாக விளங்குவதற்கு முயல்வேன்.

## தியானம் -13 தெய்வீக ஈடுபாடு

**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**

என் தோட்டமானது வயிற்றுப்பசியைப் போக்கும் உணவோடு மட்டுமே அமைந்து விடுவதில்லை. நிலையான ஆத்ம நல்வாழ்வையும், சத்தியத்தையும், அழகையும், நன்மைகளையும், தெய்வீகத்தையும் அடைகின்ற அளவுகடந்த ஆத்மபசியையும் நான் உடையவன். இதை நான் மனப்பூர்வமாகவே உறுதியாகவே என்னில் நம்புகின்றேன்.

தெய்வீக ஈடுபாடு உலகியல் வாழ்வுக்கு மாறானது எனவும், தெய்வீக ஒழுக்கம் உலகியல் வாழ்வின் முன்னேற்றத்துக்குத் தடையானது எனவும் , சிலர் சொல்வதை நான் ஏற்பதில்லை.

உலக வாழ்விலும், உலகியல் முயற்சிகளிலும், சமுதாய உறவுகளிலும், உயர்நிலை இழிநிலை என்பன எப்போதுமே நிலவுகின்றன. உலகியல் சூழ்நிலைகள் ஒருவனுடைய ஆன்மீக நலத்தையும் பெரிதும் பாதிக்கின்றன. ஆகவே, தெய்வீக நாட்டம் அனைவருக்குமே தேவை என்பதை அறிந்து, நான் எப்போதும் மகா சக்தியை என் உள்ளத்திலேயே குடியேறச் செய்து, மனம் கலந்து போற்றிவருகின்றேன். இதனால், நான் ஆத்ம உயர்ச்சியை நாளுக்கு நாள் அடைந்து, மகிழ்ந்து தெளிந்து வருகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான தெய்வீக ஈடுபாடு, மனிதனின் எல்லா வகையான முயற்சிகளிலும், தெய்வீகமான ஒளியையே பரவச் செய்கின்றது.

எல்லாவற்றையும், நன்மையாகவும் , நற்பலன் தருவனவாகவும், மனக்களிப்பைத் தருவதாகவும் நிறைவேறச் செய்கின்றது.

ஆகவே, நான் எப்போதும் என் செயல்களை எல்லாம், தெய்வத்தின் கருணை நிழலிலேயே நின்று செய்வதில் நிம்மதியும் , ஆனந்தமும் , வெற்றியும் மிகுதியாகக் காண்கின்றேன்.

தெய்வீக நாட்டம் என் நடத்தைகளை ஒழுங்குப்படுத்துகிறது. என்னைத் தீய நினைவுகளிலிருந்து காக்கின்றது. என் ஆசைகளை அளவுபடுத்தி, என்னை நிம்மதியாக வாழச் செய்கின்றது. என்னைப் பற்றும் தீயவைகளை அழித்து, என்னை நிழலிலே வாழும்போது நான், ஆத்மானந்த வாழ்வையே எப்போதும் காண்கின்றேன்.

உலகியல் வாழ்வுக்குத் தெய்வீக நாட்டம் வேண்டாம் என்பது, முள்காட்டிலே நடந்து போகக் கதிரவனின் வெளிச்சம் வேண்டாம் என்பது பொல, மிகவும் அநியாயமான கரட்டுவாதம் என்றே நான் உறுதியாக நினைகின்றேன்.

நீதான் இதற்கும் துணை தாயே!

## தியானம் -14 குழந்தை வளர்ப்பு

**ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!**

என் குழந்தைகளிடம், பொய்யான விடைகள் வரும்படியான இக்கட்டான நிலையிலே, எந்தவொரு கேள்வியையும் எந்த ஒரு நேரத்திலும் நான் கேட்கவே மாட்டேன். விளையாட்டாகக் கூடக் கேட்கமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் உண்மையே பேசுவது என்றும், அதுவே சிறப்பும் உயர்வும் தரும், என்றும் உறுதியோடு தம் மனத்திலெ பதித்துக்கொள்ளும் வகையிலே, என் பிள்ளைகளை நான் உருவாக்குவேன், உருவாக்கியும் வருகின்றேன்!

நானும் உண்மையையே எப்போதும் பேசுவேன்! அவர்களையும் உண்மையையே எப்போதும் பேசும் படியாக ஊக்கப்படுத்துவேன். ஊக்கப்படுத்தியும் வருகின்றேன், உண்மை உயர்வு தரும்! அது மகா சக்தியின் வடிவம்!

முழுக்கப்பொய்யான ஒன்றை, அலட்சியப்படுத்திப் போகட்டும் என்று விட்டுவிடவும் மாட்டேன். தலையை வலிப்பதாக ஒரு குழந்தை சொன்னால், அதை அமைதியாகப் படுத்திருக்கும்படி படுக்கையிலே கொண்டு போய்ச் சேர்த்துவிடுவேன். தலைவலி இல்லாவிட்டால் அது பத்துநொடி கூடப் படுத்திராது அதன்பின், 'தலைவலி ' என்று அது பொய்யாகப் பாசாங்கும் செய்யாது.

பணவிஷயத்தில், குழந்தைகளுக்கு ஆசை ஏற்படும்படி மறைமுகமாகவோ, நேரடியாகவோ தூண்டமாட்டேன். தூண்டுதல் பெறவும் விடமாட்டேன்! அடிக்கடி அவர்கட்குச் சில்லறைக்காசுகள் தருவதனால், கடைகளில் கண்டதை வாங்கித்தின்னும் சபல நாக்குணர்வுக்கு, அவர்கள் தம்மை அறியாமலே இரையாக்கி விடுவார்கள் என்பதை மறவேன்.

வீட்டிலே கண்ட இடங்களில் காசுகள் வைக்கபட்டிருந்தால், எடுத்துக்கொள்ளலாம் என்ற சபல உணர்வு குழந்தைகளுக்கு உண்டாகிவிடும். இரண்டையும் தவிர்ப்பேன். தவிர்த்தும் வருகின்றேன்!

தன்மதிப்பும், தன்னம்பிக்கையும் உடையவர்களாகவும், வாய்மையும், நல்லொழுக்கமும் நிரம்பியவர்களாகவும், அன்பும், பணிவும் அறிவும் நிறைந்தவர்களாகவும், தூய்மையும் இன்சொல்லும் உதவும் மனப்பான்மையும் பெற்றவர்களாகவும் என் மக்களை உருவாக்குவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் அவர்களை ஊக்கப்படுத்தியும், நானே எடுத்துக்காட்டாக விளங்கியும் அவர்கட்குத் துணை செய்வேன்! துணை செய்தும் வருகின்றேன்!

தெரியாமல் சொல்லிவிட்டேன் என்றோ தெரியாமல் செய்து விட்டேன். என்றோ, பிள்ளைகள் சொல்லாதபடி அவர்களை எப்போதும் நேர்மையிலே நிலைத்திருக்கச் செய்வதே என் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொள்வேன், கொண்டிருக்கின்றேன்! அவர்களைச் சக்தித்தாய் நீயே என்றும் காப்பாயாக!

## தியானம் -15 தெய்வம் போற்றல்

ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம்!

சகல உலகங்களுக்கும், மாதாவான, அன்னை மகா சக்தியே! உன் பெயரை, ஓம் சக்தி! ஓம் சக்தி! ஓம் சக்தி! என்று ஓயாமல் ஒழியாமல் சொல்லிக் கொண்டே இருப்பதில் நான் அளவற்ற ஆத்ம இன்பத்தைக் காண்கின்றேன்.

உன் திருநாமத்தைச் சொல்லச் சொல்ல, என் உள்ளத்திலும், உடலிலும் , மகா சக்தியும், ஞானத்தெளிவும், சிந்தனைத் தூய்மையும் வாழ்வில் நம்பிக்கையும் அரும்புவிட்டு மலர்ந்து மணம் வீசக் காண்கின்றேன்.

உன்னுடைய அருள் ஆட்சியே எல்லாவிடத்தும், எல்லாரிடத்தும் நிலவுவதையும் உணர்கின்றேன்.

உன்னுடைய திருவருள் நோக்கமே, எந்நேரத்திலும், எவ்விடத்திலும் செயல்பட்டு நிறைவேறி வருவதையும் காண்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகியலில் நல்ல செழுமையான வாழ்வுக்கும், ஆன்மாவின் நிரந்தரமான ஆனந்தத்துக்கும் வழிகாட்டியாக அமைந்தும், அவை எனக்குச் சித்தியாகும்படி செய்தும், எனக்குப் பேரருள் புரிகவள் மகா சக்தியாகிய நீயே! ஆகவே, உன் திருநாமத்தையே எப்போதும் சொல்லிச் சொல்லிக் போற்றுகின்றேன்.

என்றைக்கும் எங்கள் பசி தீரவும், வாழ்க்கை நலமாகவும், நிம்மதியாகவும் அமையவும் கருணை காட்டுவாயாக, என்றைக்கும் நான் மேற்கொள்ளும் செயல்கள் எனக்கு வெற்றியையும் இலாபத்தையும் திருவனவாகவே விளங்குமாறு நடத்தி வைப்பாயாக!

என் குற்றங்களையும் , நான் தெரிந்தோ தெரியாமலோ செய்த பாவச் செயல்களையும், கருணை கனியும் மனத்துடன் மன்னித்து, என்னைக் காத்துத் துணை நிற்பாயாக!

இவ்வாறறே, நானும் பிறருடைய குறைகளைப் பாராட்டாமல் இருக்கவும், பிறருக்கு உதவியும் அன்புகாட்டி நடக்கவும் வேண்டிய மனோசக்தியையும், பண்பையும், அருள் நோக்கத்தையும் எனக்குத் தந்தருள்வாயாக!

எனக்குச் சோதனைகளை வைத்து, என்னைத் துன்புறுத்தாமல், என்னை நாடிவரும் தீயவைகளை அறவே தடுத்து நீங்கச் செய்து, என்னை எப்போதும் நின் அன்புக்குரிய ஆதரவுக்குரிய குழந்தையாகவே கருதித்துணை செய்வாயாக. நீயே எனக்குக் கதியாக என்றும் நிலவுவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தர்களின் அரிய பொக்கிஷம்

## 1. அறுகம்புல்

அறுகம்புல் வாதபித்த ஐயமோ டீளை
சிறுகவறுக்கு மின்னஞ் செப்பி- லறிவுதருங்
கண்ணோயொடு தலைநோய் கண்புகை யிரத்தபித்த
முண்ணொ யொழிக்கு முறை.

விநாயகர் கழுத்தினில் அணியக்கூடியதும், மக்கள் அனைவரும் அறிந்ததுமான அறுகம்புல்லை நாம் மிக மிகச் சாதாரணமாய் நினைத்து அதைக் கணேசருக்கு மட்டும் சாற்ற அறிந்தோமே தவிர, இது கற்பமூலி என எவரும் அறிந்திலர்.

அறுகம்புல் திரிதோஷம், கோழை, கண்ணோய், சிரஸ்தாபம், தும்பிரம நோய், ரத்தபித்தம், மருந்துச்சூடு இவைகளைப் போக்கும். நல் அறிவைத் தரும்.

தினந்தோறும் குளித்தவுடன் வெறும் வயிற்றில் அறுகம்புல் சாற்றையோ அல்லது அதனுடன் முருங்கைச் சாற்றைக் கூட்டியோ மண்டலங்களாக அருந்திவர நரை, திரை விலகிச் சரீரம் கற்பமாகும்.

அறுகு மூலத்தைச் (வேர்) சுத்தப்படுத்தி அரைத்து அவ்விழுதைக் கொட்டைப் பாக்களவு பசும்பாலில் சேர்தது அருந்த சகல விஷமும் தீரும். நரையும், திரையும் மாறும். நரம்புகள் இறுகும். தேகபலம் உண்டாகும்.

அறுகம்புல் கஷாயம், ருசியும், குளிர்ச்சியும் உண்டாக்குகிற மிகவும் விரும்பும் குடிநீராக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பம் சாப்பிடும் காலத்தில் அறுகம்புல் ஒருபிடி சுத்தப்படுத்தி, 25 மிளகுதட்டி சேர்த்து ஒருபடி தண்ணீரில் கலந்து எட்டில் ஒரு பங்கு நீர் வரும்படி சுண்டக்காய்ச்சி, அதில் பசுவெண்ணெய் கொட்டைப்பாக்களவு போட்டு மாலையில் அருந்திவர கற்பம் சாப்பிடுவதால் ஏற்படும் தோஷம், மருந்துச் சூடு இவை நீங்கி உடல் நல்ல ஒளியுடன் பொன்னிறமாகும்.

**நல் அறிவுக்கு அறுகம்புல்**

## 2. அவுரி இலை

**உரிய வவுரித்தழை தானோது பதினெண்**
**ணரிய நஞ்சைத் தின்றவர்க்குமாகுந்- தெரிவரிய**
**வாத வெப்புகாமாலை மைந்தர்க்குறு மாந்தத்**
**தேக மகற்றுந் தெரி.**

**சந்தி பதின்மூன்றுஞ் சந்தொடித்த வாதமுத**
**லுன்னு விஷக்கடியு மோடுங்காண்- மின்னுங்**
**கவுரிநிற முண்டாகுங் காசினி யுளேநல்**
**லவுரி யிலையா லறி.**

அவுரி இலை கைப்பிடி எடுத்துச் சுத்தப்படுத்தி நிழற்பாடமாய் உலர்த்தி சலித்து சூரணமாகத் தேனில் குழைத்து காலை மாலை மண்டலமாய் உட்கொள்ள கந்த மூல விஷங்கள் 18ம், வாதசுரம், காமிலம், மாந்தம், சீதளம், சந்தி பாதங்கள் 13ம், கீல் வாதம் , சர்ப்ப விஷம் இவைகளும் நீங்கும். உடலுக்குப் பொன்னிறந்தரும்.

அவுரி வேர் கஷாயம் விஷங்களை முறிக்கும் அதீத சக்தி படைத்தது.

கேரளாவில் கல்லடைப்புக்கு அவுரி வேர் கஷாயம் கொடுக்கப்படுகிறது.

**விஷ முறிவுக்கு அவுரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. ஆடாதோடை

ஆடாதோடைப் பன்ன மையறுக்கும் வாதமுதற்
கோடாகோடிச் சுரத்தின் கோதொழிக்கு- நாடின்
மிகுத்தெழுந்த சந்திபதின் மூன்றும் விலக்கு
மகத்துநோய் போக்கு மறி.

காசமொடு மந்தங் கதித்தபித்தங் கொடுஞ்சு
வாசங் கழுத்துவலி முதநோய்- கூசி
யோடா திராதிங் கொளுநாளு மொண்டொடியே
யாடாதொடைத் துருக் கஞ்சி.

ஆடாதோடை இலை கபாதிக்கம, வாததோஷம், பற்பலசுரம், சந்திபாதம் 13, வயிற்றுநொய் ஆகியவைகளை நீக்கும்.

ஆடாதோடை வேரால் இருமல், அக்கினி மாந்தம், சுவேத பித்தம், மனசுவாசம், கபரோகம் முதலிய நோய்கள் விலகும்.

ஆடாதோடை வேரைச்சுத்தப்படுத்தி பசும்பாலில் அவித்த நிழலிலுலர்ததி, இடித்து, சலித்து, வஸ்திரகாயம் செய்து சூரணித்த இப்பொடியைப் பசும்நெய் , சர்க்கரையுடன் 5 கிராம் கலந்து காலை, மாலை இருவேளை மண்டலங்களாகச் சாப்பிட்டு வர காயசித்தி தரும்.

ஆடாதோடையின் இலை சற்று நீளமாய் பச்சைப் பசேல் என்று இருக்கும். ஆடாதோடை இலை பத்து எடுத்து சுத்தப்படுத்தி அம்மியில் மைபோல் அரைத்து, மற்றொரு ஆலிலையால் மூடிவைத்து அதன்மேல் செம்மண் துணிசுற்றி ஆவியில் நன்கு வேக வைத்து, வெந்த அகற்றிவிட்டு , உள்ளே இருக்கும் ஆடாதோடை இலையின் வெந்த விழுதைப் பிழிந்து சாறு எடுத்து, ஒரு தேக்கரண்டி சாறுடன் பத்துத்துளி சுத்தமான தேன் கலந்து உட்கொண்டால் தீராத கபம், சுவாச காசநோய் நீங்கும். இருமும் போது வாயில் இருந்தும், மார்பிலிருந்தும் ரத்தம் வந்தால் அதை உடனடியாக நிறுத்திவிடும்.

ஆடாதோடையின் இலையின் சருகுகளைச் சுருட்டி புகைப்பிடித்தால் 'இழுப்பு' உடனடியாக நின்று தாராளமாய்ட மூச்சு விட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடாதோடை பூக்கள் வெண்மையாகவும், மணமாகவும் இருக்கும். கண் வலிக்குச் சிறந்த நிவாரணி ஆடாதோடை பூக்கள்.

ஆடாதோடை பூக்களைக் கண்களின் மேல்மூன்று நாட்கள் கட்டி வர சிவப்பு , கண்வலி நீங்கும்.

ஆடாதோடை இலை, ஆடாதோடைய பட்டை இரண்டையும் சேர்த்து கஷாயமாகச் செய்து சூடாக இருக்கும் போது கீழ்வாயுப்படிப்பு உள்ள பாகத்தில் ஒத்தடம் கொடுத்தால் கீழ்வாயு வலியும், வீக்கமும் வடிந்து குணமாகும்.

ஆடாதோடையின் இலை, பட்டை, வேர் யாவுமே மருத்துவ குணம் கொண்வை.

# 4. ஆடையொட்டிப் பூண்டு

இது ஒரு வசிய மூலிகை, இதன் காய்ச் சாற்றை முறைப்படி மண்டலமாய் அருந்தி வர சரீரம் திடப்பட்டு காயசித்தி ஏற்படும். இந்த மூலிகை வசிய மூலிகை என்பதால் முறைப்படி சாப நிவர்த்தி செய்து, தூப, தீப பொங்கலிட்டு , பலிகொடுத்து, பிராண பிரதிஷ்டை செய்து, மந்திரம் சொல்லித்தான் இதைப் பிடுங்க வேண்டும். அப்போது தான் உரிய பலன் கிட்டும்.

இதன் சாற்றைப் பாதரசத்தில் விட பாதரசம் மணியாகும். இம்மணியைத் தாயத்தில் அடைத்து புஜத்தில் கட்டிச்செல்ல எதிரியும் வசமாவான். நாம் நினைத்தபடி நம் காரியங்களைப் பிறர்மூலமாகச் செய்துகொள்ளுயும் வசீகர சக்தியை இம்மூலிகை ஒன்றின் மூலமே பெறலாம் என்பதை உணர்க.

# 5. கடுக்காய்

**கடுக்காயுந் தாயுங் கருதிலொன் றென்றாலும்**
**கடுக்காயத் தாய்க்கதிகங் காண்- சுடுக்காய்நோ**
**யோட்டி யுடற்றோற்று முன்றவன்னை யோசுவைக**
**ளூட்டி யுடற்றேற்று முவந்து.**

கடுக்காயும் தாயும் ஒன்றென ஒருவாறு நினைத்தாலும், தாயைப் பார்க்கிலும் கடுக்காயே அதிகமாம். ஏனெனில் கடுக்காயனது பிணிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீக்கிச் சரீரத்தைத் தேற்றும். தாயானவள் அறுசுவை உணவு ஊட்டியுடலை வளர்பபாள். ஆனால் பிணிகளை நீக்கினாலல்லவோ உணவு பயன்பட்டு உடல்தோறும் என்னும் வகையறியாமல் உணவை மாத்திரம் ஊட்டுந் தன்மையுடைவளாதலால் அத்தாயினும் கடுக்காய் சிறந்ததெனக் கூறியுள்ளார்கள். கடுக்காய் வித்து அமிர்தம் என்பதால் கடுக்காய் அமிர்தத்துக்கு ஒப்பானது எனவும் கூறுவர்.

கடுக்காயில் கற்பமாகச் சாப்பிட செங்கடுக்காய் எனப்படும் சீமைக்கடுக்காயே சிறந்தது.

செங்கடுக்காய் எனப்படும் சீமைக் கடுக்காயைக்கொட்டை நீக்கி நன்றாகச் சுத்தம்செய்து வெய்யிலில் காயவைத்து இடித்து, சலித்து, விஸ்திரகாயம் செய்து சூரணித்து வைத்துக்கொள்ள வேண்டும்.

பின்னர் ஒரு பாத்திரத்தில் அளவாகப் பசும்பால் எடுத்து, சிறிது தண்ணீர் கலந்து அந்த பாத்திரத்தின் மீது துணிவேடு கட்டி, அதன்மேல் சூரணித்து வைத்துள்ள கடுக்காய்த் தூளைக்கொட்டி அப்பாத்திரத்தை அடுப்பில் வைத்து, சூரணத்தை வேக வைத்து , பிட்டு அவியலாய் வெந்த கடுக்காய் சூரணத்தை ஒரு தட்டில் பரப்பி வெய்யிலில் காயவைத்து , நன்றாய் காய்ந்த பின் மறுபடியும் இடித்து, சலித்து, வஸ்திரகாயம் செய்து சூரணத்தை ஒரு சுத்தமான கண்ணாடிப் புட்டியில் வைத்துக்கொளள் வேண்டும்.

ஒவ்வொரு நாளும் காலையில் மட்டும் கடுக்காய் சூரணத்தை நெல்லிக்காய் அளவு எடுத்து ஒரு ஆண்டு காலம் சாப்பிட்டு வர நரை, திரை மாறி சரீர திடம் ஏற்பட்டு காயசித்தியாகும்.

ஒவ்வொரு நாளும் உப்பு, புளிப்பு, காரம் நீக்கி இல்லற சுகத்தையும் தவிர்த்து கடுககாய் சூரணத்தை நெல்லிக்காய் அளவு எடுத்து ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் நரை, திரை நீங்கி காயம் கற்பமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரை, வைகாசி இரு மாதங்களும் கடுக்காய் சூரணத்தைத் தேனுடன் சாப்பிட வேண்டும்.

ஆடி, ஆவணி மாதங்களின் கடுக்காய் சூரணத்தை வெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டு வரவேண்டும்.

ஆவணி, புரட்டாசி மாதங்களில் கடுக்காய் சூரணத்தை இந்து உப்புடன் சேர்த்து சாப்பிட வேண்டும்.

ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் கடுக்காய் சூரணத்தை சர்க்கரையுடன் சேர்த்து சாப்பிட்டு வர வேண்டும்

மாசி, பங்குனி மாதங்களில் கடுக்காய் சூரணத்தை திப்பிலியுடன் சேர்த்து சாப்பிட்டு வரவேண்டும்.

கடுக்காய் சூரணம் கற்பமாக , அமிர்தமாக சாப்பிடும் காலத்தில் மாலையில் அறுகம்புல் சிறிதளவு எடுத்து, சுமார் இருபது மிளகு தட்டி அதனுடன் சேர்த்து ஒரு படி தண்ணீரில் அவற்றைப் போட்டு, அதை அரைக்கால்படி அளவு தண்ணீராகும்படி சுண்டக் காய்ச்சி அதில் நெல்லிக்காய் அளவு பசும்வெண்ணெய் சேர்த்து அருந்தி வர கற்பத்தினால் ஏற்படும் உஷ்ணம் விலகி தேகம் நல்ல தேஜஸ் பெற்று காயமாகும்.

கற்பமாக அல்லாமல் கடுக்காய் சூரணத்தை உணவிற்குப் பின்னால் சாப்பிட உணவின் மீதான வெறுப்பு நீங்கும், கடுக்காய் சூரணத்தை உப்புடன் சேர்த்துச் சாப்பிட பித்தம் அகலும்.

கடுக்காய் சூரணத்தை நெய்யுடன் சேர்த்துச் சாப்பிட, வாயுகுற்றம் நீங்கும்.

கடுக்காய் சூரணத்தை வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட திரிதோஷம் வாத, கப, பித்தத்தால் ஏற்படும் முக்குற்றமும்- நீங்கும். கடுக்காய் சூரணம் சகல வியாதிகளையும் போக்க வல்லது.

**அமிர்தத்துக்கு இணையானது கடுக்காய்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

*"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை*
*செந்நன்றி கொன்ற மகற்கு"*

2022.03.08 செவ்வாய் கிழமையன்று இவ்வுலகை நீர்த்த எம் குடும்ப தெய்வம் குன்றிலிட்ட விளக்காக எம் அனைவரது வாழ்விலும் நிழல்தரு ஆலமரமாக இருந்து மறைந்த அமரர் கார்த்திகேசு பசுபதிப்பிள்ளை அவர்களின் இழப்பின்போது எம் வீட்டு உறவாக விரைந்து வந்து எம்மை ஆசாவாசப்படுத்தி ஆறுதல் அடைய செய்த உறவுகளை நிறை நன்றியுடன் நினைத்து நெஞ்சம் நெகிழ்வுறுகிறோம்.

அனைத்து வழிகளிலும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி உதவியவர்களையும், நேரடியாகவும், தொலைபேசி, தொலைநகல் வலைப்பின்னலில் ஆறுதல் அளித்த அனைவருக்கும் தனிநபராக, சங்கங்கள், அமைப்புக்கள் , பாடசாலைகள் ஆகியவற்றினூடாக பதாதைகள், பிரசுரங்கள் மூலமாக அஞ்சலி செலுத்தியோருக்கும் அனைத்து வேளைகளிலும் போசனங்கள், குளிர்பானங்கள் வழங்கி உதவியவர்களுக்கும், அஞ்சலி உரைத்து விடை பகிர்ந்தோர்களுக்கும், பந்தல்கள், ஒலிபெருக்கி மற்றும் சேவைகள் பல உதவியவர்களுக்கும், இறுதி நாட்களில் புராணப் பதிகம் பாடியோருக்கும், வெளிநாடுகளிலுள்ள எமது உறவுகளுடன் தொடர்புகொண்டு தேறுதல் அளித்தவர்களுக்கும், இறுதி நிகழ்விலும் இறுதி ஊர்வலத்திலும் அந்தியகால சேவைகளில் இணைந்திருந்தோர்களுக்கும் இம்மலருக்கான அமரர் அவர்களின் நினைவுகளை பதிந்தவர்களுக்கும், அதனைத் தொகுப்புச் செய்த கதிர் நித்தியானந்தராஜா மற்றும் அ.பிரியன்(சுவிஸ்) அவர்களுக்கும், கணினி வடிவமைப்புச் செய்த திருமதி.ர.விஜிதா, மேலும் அச்சிட்டு உதவிய அகரன் அச்சகத்தினருக்கும், இன்று நடந்துகொண்டிருக்கின்ற அந்தியேட்டி கிரியைகளிலும், சபீண்டிகர வைபவத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்ச

★ கார்த்திகேசு + ★ கதிராசிப்பிள்ளை

★ நாகமுத்து
★ சோதிப்பிள்ளை
★ வள்ளிப்பிள்ளை
★ கணபதிப்பிள்ளை
★ நாகமணி
★ அம்பலவாணர்
நாகலிங்கம்
பசுபதிப்பிள்ளை
★ சின்னம்மா

ரஞ்சினி
+
திருஞானசம்பந்தர்
↓
மிதுரா + சிந்துஜன்
சாத்விகா
சஷானி
திருஷன்
டயானா

மங்கையற்கரசி
+
இராசேஸ்வரன்
↓
சங்கீர்த்திகா
கினோஜினி
கினோஜன்

★ ரவீந்திரநாதன்

குகநாதன்
+
ஜெயந்தி
↓
நிலானி
ஆதவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...ட்சம்

★ சின்னத்தம்பி + ★ வள்ளியம்மை

★ அந்தோனியாப்பிள்ளை

★ பார்வதி

நல்லம்மா

பராசக்தி

★ யோகராசா

பரமானந்தம்

★ குணரத்தினம்

★ தையல்நாயகி

...நாதன் + ...யந்தி ↓ ...லானி, ...தவன்

சிவகுமார் + சாந்தரூபி ↓ டர்சன், லோஜா, சஜீத்

கஜவதனா + கண்ணபிரான் ↓ கீர்த்தனி, நிருவர்த்தனி, பிரணவன், கவி ஆரபி

கலாதேவி + லிங்கநாதன் ↓ அக்சயன்

★ அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க!

ஜனனமும் பூமியில் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் இங்கே

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்று இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்று இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடு ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதேன்ன !

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடிவந்து சேரும்

பூமிக்கு நாம் ஒரு யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர்கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரியக் கீற்றொளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்

மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்
மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க !
தூயவர் கண்ணொளி சூரியன் சேர்க !
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org